# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**டிசம்பர் 2002 ஜீவியம் 8 மலர் 8**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 21 |
| லைப் டிவைன் | 22 |
| சாவித்ரி | 30 |
| அன்பரும் - நண்பரும் | 32 |
| சரணாகதி சமாதியைக் கடந்தது | 42 |
| அஜெண்டா | 50 |
| அபரிமிதமான செல்வம் | 52 |
| அன்பர் கடிதம் | 57 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 59 |
| இலட்சியத் திருமணம் | 62 |


✯ ✯ ✯

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**741) ஞானம் முழுமை பெற்று கூர்மையானால் செயலை நிர்ணயிப்பது எது எனத் தெரியும். ஹாம்லெட், சிம்போசியம் எப்படி எழுந்தன எனத் தெரிந்தால் ஞானம் கூர்மை பெறும்.**

***இலக்கிய சிறப்பறியும் ஞானம்.***

விஞ்ஞானம் உலகை வளமாக்கியுள்ளது. பொருள்கள் எப்படிச் செய்யப்படுகின்றன என அறிவதால், விஞ்ஞானியால் அவற்றைச் செய்ய முடிகிறது. செயற்கையாகப் பொருள்களைக் கண்டுபிடிப்பதாலும், இயற்கையாகவுள்ள பொருள்களின் தன்மையை அறிவதாலும் நாம் வசதியாகவும், வளமாகவும் வாழ்கிறோம்.

செடியில் தான்யம் விளைவதைக் கண்டுபிடித்ததால், விவசாயம் ஏற்பட்டது. கல்லைச் சுத்தியலாகப் பயன்படுத்த முடியும் என்று ஆரம்பித்து இன்று பல்வேறு சுத்திகளை டெக்னாலஜி கண்டுள்ளது. எழுத்தாணி, பேனா, துணி, பேப்பர், வீடு கட்டுவது போன்ற இலட்சக்கணக்கான பொருள்களைக் கண்டுபிடித்துள்ளோம். வயிற்றிலுள்ள பிள்ளை ஆணா, பெண்ணா என்று கண்டுபிடித்துவிடுவான் என்று அன்று கூறியது இன்று உண்மையாகிவிட்டது.

**விஞ்ஞானம் உலகில் எப்படி மரம் வளர்கிறது எனக் கண்டுபிடித்துவிட்டது, ஏன் வளருகிறது எனக் காணவில்லை என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.**

எப்படி வைரம், முத்து, செடி, விதை வளர்கின்றன என விஞ்ஞானம் கண்டுபிடித்ததால் நம்மால் வைரத்தையும், முத்தையும் செய்ய முடிகிறது. செடியையும், விதையையும் சிறப்பிக்க முடிகிறது.



ஏன் அவை உற்பத்தியாகின்றன எனக் கண்டுபிடித்தால் வாழ்வுக்கு நாம் அடிமைப்படுவதற்குப் பதிலாக, நமக்கு வாழ்வு கட்டுப்படும்.

விதையிலிருந்து செடி எப்படி வருகிறது என விஞ்ஞானம் கூறுகிறது. ஆனால் ஏன்? என்ற கேள்விக்கு அங்குப் பதிலில்லை. உலகம் விதையையும் விளக்கவல்லது. உலகத்தை இறைவன் விளக்குகிறார் என ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.

**அந்த விளக்கம் ஆத்ம ஞானமாகும்.**

Cosmic Determinants என்ற அத்தியாயத்தில் Life Divineஇல் ஸ்ரீ அரவிந்தர் இந்தக் கேள்விக்குப் பதில் கூறுகிறார். அவர் கூறும் பதில்:

**“இறைவன் திருவுள்ளம்” என்பதே.**

நம் எண்ணமும், இறைவனின் திருவுள்ளமும் இணையும்பொழுது நமக்குத் திருவுள்ளம் புரியும். அதுவரை செயலின் போக்கை நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது சமர்ப்பணம். சமர்ப்பணம் சரணாகதியாகி, மனித மனம், இறைவனின் திருவுள்ளமாகும். உபநிஷத்தில் கூறுவதை பகவான் எடுத்துக்கூறி இவ்விளக்கத்தைத் தருகிறார்.

இந்திய விஞ்ஞானி திருவுள்ளத்தை அறிந்தால் - அவனால் அது முடியும் என்பதால் - விஞ்ஞானமும், ஆன்மீகமும் இணையும் அல்லது யோகி விஞ்ஞானியாக வேண்டும். உலகில் இத்துறைகள் இணைவது மாபெரும் மாறுதலாகும்.

விஞ்ஞானம் கண்டுபிடிக்காததில்லை எனலாம். Gene, Chromosome ஜீன், குரோமசோம் என்பவை எப்படி மனிதன் உயரம், முடியின் நிறம் போன்ற விவரங்களை நிர்ணயிக்கின்றன என்பதைக் கண்டுள்ளனர். சந்திரனுக்குப் போய்த் திரும்பிய ராக்கட் பூமியில் திரும்பிவரும் நேரத்தைக் கணக்கிட்டனர். அதுவும் சொன்ன

நேரத்திற்கு வந்து சேர்ந்தது. 9 செகண்ட் தாமதம் எனக் கணக்கிட்டனர். உலகின் விஞ்ஞான வளர்ச்சியை விவரிக்க வேண்டிய அவசியமில்லை. விஞ்ஞானம் அந்த அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது.

பகவான் இக்கருத்தை மேலும் வளர்த்து விளக்குகிறார். ஷேக்ஸ்பியர் ஹாம்லெட் எழுதினார். அவரும், அவர் படைப்பும் உலகப் பிரசித்தியடைந்தன. மனிதனுடைய உயரம், நிறம் போன்ற அத்தனை விவரங்களையும் நிர்ணயித்த விஞ்ஞானம் ஹாம்லெட் எழுதிய ஷேக்ஸ்பியரின் மூளையில் எந்த மாற்றம், இந்த படைப்புக்குக் காரணம் என்று கண்டுபிடிக்கவில்லை. விதையிலிருந்து மரம் வளரும் எல்லா நிலைகளையும் துல்லியமாகக் கூறும் விஞ்ஞானம், விதை எப்படி மரத்தின் உருவத்தைப் பெறுகிறது எனக் கூறமுடியவில்லை. இன்றுவரை விஞ்ஞானம் காணாதது இது. காணமுடியாது என விஞ்ஞானிகள் கருதுவதும் இதுவே.

ஹாம்லெட் எழுதப்பட்டது எப்படி என்றாலும், அடுத்த நிமிஷம் நாம் என்ன செய்யப் போகிறோம் என்றாலும் ஒன்றே. அதை நிர்ணயிப்பது எது என்பது காணமுடியாததாக இருக்கிறது. பூரணயோகம் அதைக் காணமுடியும் என்று விளக்குகிறது. இது சிருஷ்டியின் இரகஸ்யம். Life Divine அந்த இரகஸ்யத்தை உலகுக்கு முதன்முதலாக அளித்துள்ளது.

நாம் பெற்ற ஞானம் அஞ்ஞானமாகும். அதை 7 வகைகளாகப் பிரித்து முதலில் செய்வதறியாமல் இருப்பதும், முடிவாக ஆதியை அறியாததும் என்று கூறி இடைப்பட்ட நிலைகளில் நம் ஜீவனின் பகுதிகளை அறியாதது, நாம் வாழும் உலகில் பகுதிகளை அறியாதது, காலத்தை அறியாதது, பிரபஞ்சத்தை அறியாதது, சிருஷ்டியை அறியாதது என 5 அஞ்ஞானங்களைக் கூறுகிறார். ஒரு காரியம் பூர்த்தியாக நாம் என்ன செய்யவேண்டும் என்று அறியாதது practical



ignorance நடைமுறை அஞ்ஞானம். ஞானம் முழுமை பெறும் நிலையில் செய்வது பூர்த்தியாகும். செய்வது பூர்த்தியானால் ஞானம் முழுமை பெறும்.

ஞானம் முழுமை பெற்றால் செய்யும் காரியங்களில் ஒன்றுகூட கெட்டுப்போகாது. ஞானம் கூர்மையானால் பூர்த்தியான காரியங்களின் பகுதிகள் தெளிவாகும். இது தத்துவம். பூரண யோகத்தைப் பொருத்தவரை நடைமுறைக்கு வாராத அம்சமேயில்லை என்று கூறலாம்.

பூரண ஞானம் பெறுவது சிரமம் என்றாலும், செய்யும் காரியங்களில் – மாநாடு நடத்துவது, திருமணம் செய்வது போன்றவற்றுள் – நாமறிந்த அனைத்தையும் அகந்தையின்றிச் செய்து முடித்தபின், அன்னையை அழைத்தால் காரியம் தவறாது பூர்த்தியாகும். இதற்குப் பூரண யோகத்தில் விலக்கில்லை.

இதைச் செய்ய எந்தத் தீவிர பக்தராலும் முடியும். தாம் கட்டும் வீட்டில் விவரங்கள் எப்படி எழுந்தன, எப்படிப் பூர்த்தியடைந்தன என்பவற்றை முழு ஆர்வம் உள்ள தீவிர பக்தர்கள் தவறாது காணலாம். அது ஞானத்தைக் கூர்மையாக்கும். நாம் செய்த காரியங்களுக்குள்ள ஞானம் கூர்மையாகும். அது பூரண ஞானக் கூர்மையைப் பெற வழி கோலும்.

★ ★ ★

**742) பரம்பொருளே (Absolute) நிர்ணயிக்கிறான் என்பதால், ஹாம்லெட் எழுதியபோது பரம்பொருளின் நிலை எது என நாம் அறிய வேண்டும்.**

***ஹாம்லெட் எழுதிய பரம்பொருள்.***

பேரிலக்கியம், அழியா இலக்கியம் எனச் சங்க இலக்கியம், திருக்குறள், தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்,

இராமாயணம், பாரதம், கீதை, வேதம், உபநிஷதம் ஆகியவற்றை நாம் விவரிக்கின்றோம். அச்சிட்டோ, வரிவடிவத்தாலோ இலக்கியங்களைக் காப்பாற்றுகிறோம். ஷேக்ஸ்பியர், மில்டன், டான்டே, ஹோமர், அரிஸ்டாடில், பிளேட்டோ, சாக்ரடீஸ் ஆகியவரின் எழுத்து ஆரம்ப நாளிலிருந்து எழுதப்பட்டு காப்பாற்றப்பட்டது.

*எழுதாவிட்டாலும், அழியாதது, அழியா இலக்கியம்,*

என்று பகவான் கூறுகிறார். மொழிபெயர்ப்பாலும் அதன் உயர்வு குறையாது என்கிறார். இவற்றை விளக்குவது தத்துவமாகும். எளிதில் விளங்காத தத்துவமாகவும் இருக்கும். கர்ணபரம்பரையாக வந்து இலக்கியம் காப்பாற்றப்படுகிறது என்பதையும் பகவான் ஏற்கவில்லை. அழியா இலக்கியம் சூட்சும உலகில் அழியாமல் நிலைத்திருப்பதால் அது உலகில் அழிய வழியில்லை என்கிறார்.

படைப்பு எனில் மனிதன் ரோடு போடுகிறான், வீடு கட்டுகிறான், ஆயுதம் செய்கிறான், நல்ல காகிதம் செய்கிறான். மனிதன் உற்பத்தி செய்பவை பொருள்கள் (material objects). அவை அவன் கையால் செய்யப்படுகின்றன, உழைப்பால் எழுகின்றன. மேஜையைச் செய்தால் மரம் உலுத்துப்போகும்வரை அது பயன்படுகிறது. அதன்பின் உடைந்து, உலுத்துப் போய் மண்ணோடு மண்ணாய், மனித உடம்பு போல் மறைகிறது. உடலால் உற்பத்தியாகும் ஜடப்பொருளின் நிலை அது.

கதாசிரியர், கவிஞன், எழுத்தாளன் என்பவர்கள் அறிவாலும், உணர்வாலும் சொல் வடிவத்தில் சிருஷ்டிக்கின்றனர். பலர் எழுத்து அழிந்து மறைகிறது. சில நின்று நிலைக்கின்றன. ஆனால் ஓரிரு நூற்றாண்டில் மறைகின்றன. படைப்பு வேகமாகப் பரவி விரைவில் மறைவதுண்டு. மெதுவாகப் பரவி சில நூறு ஆண்டுகள் இருப்பதுண்டு. காலத்தால் ஏற்பட்ட இலக்கியம், காலம் மாறினால் மறைகிறது. மணிப்பிரவாளம் என்றொரு தமிழ் நடை சென்ற



நூற்றாண்டில் இருந்ததையே இன்று நம் உலகம் அறியாது. '40, '50இல் பிரபலமான நாவல்களை இன்று எத்தனை பேர் படிக்கின்றார்கள்? என்றும் அதுபோல் இலக்கியம் எழுந்து மறைவதுண்டு. காலத்தைப் பிரதிபலிக்கும் கருத்து, அதைக் கடந்து ஏற்கப்படாது.

எந்த நாட்டிலும் அழியா இலக்கியங்களாக ஏற்பட்டவை இன்று உலக இலக்கியங்களாகத் திகழ்கின்றன. மனிதன் கையால் உற்பத்தி செய்வதைப்போல் உணர்வாலும் உருவத்தை உற்பத்தி செய்ய முடியும். கற்பனையாலும் சிருஷ்டிக்க முடியும். இன்று மனிதனுடைய கற்பனையின் சிருஷ்டித்திறன் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், (material plane) பொருள்களை சிருஷ்டிக்கும் திறனைப் பெறவில்லை என வேதாந்தம் கூறுகிறது. ஆனால் அதே திறன் (subtle plane) சூட்சுமத்தில் சிருஷ்டிக்கவல்லது. சூட்சும உலகில் எண்ணம் சஞ்சரிப்பதால், எண்ணத்தால் உருவகம் பெறுபவை சூட்சும உலகுக்குரியவை. சிருஷ்டி என்று நாம் இங்குக் கூறுவது அழியாத சிருஷ்டி. பரம்பிரம்மம் ஒருவரில் - ஒரு கவியின் மனதில் - எழுந்தால், அது சூட்சும உலகில் எண்ணமாக, கதையாக, சொல்லாக, கவியாக சிருஷ்டிக்கப்பட்டால், அது உலவி வரும்பொழுது பரப்பிரம்மம் இருக்கும் இடத்தை எல்லாம் தொடும், தொட்டு உயிர்ப்பிக்கும். நம் எல்லோரிலும் பரப்பிரம்மம் இருப்பதால் கவிஞனின் படைப்பு சூட்சுமத்தில் எழுந்து நம்முள் உள்ள பரப்பிரம்மத்தைத் தொடும்பொழுது அது இனி அழியமுடியாது என்ற நிலையை அடைகிறது.

**கவிஞனின் மனத்துள் பரப்பிரம்மம் எழுந்து, சூட்சும உலகில் எண்ண உருவில் இலக்கியமாகி, மாந்தரின் மனத்துள் உள்ள பரப்பிரம்மத்தைத் தொடுவதால், எழுத்து இலக்கியமாகிறது. அதுவே பேரிலக்கியம், அழியா இலக்கியம் எனப்படுவதாகும்.**

முன்சீப் கோர்ட்டில் தீர்ப்பு சொல்கிறார்கள் எனில், அத்தீர்ப்பு ஒரு சட்டத்தின் பேரால் தரப்படுகிறது. சட்டம் என்பதை கோர்ட் போடவில்லை. சட்டம் சர்க்கார் போட்ட சட்டம். சர்க்கார் என்பது பார்லிமெண்ட். மேலும் சொன்னால், பார்லிமெண்ட் போட்ட சட்டமும் அரசியல் நிர்ணயச் சட்டத்தால் (constitution) தீர்மானிக்கப்பட்டது.

- முன்சீப் கொடுத்தது தீர்ப்பானாலும், நிர்ணயித்தது constitution அரசியல் நிர்ணயச் சட்டமாகும்.
- ஷேக்ஸ்பியர் ஹாம்லெட்டை எழுதினாலும், எழுதுவதை நிர்ணயித்தது பரம்பொருளேயாகும்.
- நம் காபியில் எவ்வளவு சர்க்கரை போடவேண்டும் என்பதை நிர்ணயிப்பதும் பரம்பொருளே என்கிறார் அன்னை.

Absolute என்பது பரம்பொருள். நமக்கோ, நம் மனத்திற்கோ, பரம்பொருளுடன் நேரடியான தொடர்பில்லை. சத்திய ஜீவியத்திற்கு நிரந்தரமான நேரடியான தொடர்புண்டு. மனம் அடிப்படையில் சத்திய ஜீவியமாகும். ஹாம்லெட் எழுதியபோது சத்திய ஜீவியத்தில் பரம்பொருளின் நிலை என்ன என்று தெரிந்தால் அது ஞானமாகும். மனமும் சத்திய ஜீவியத்தில் உற்பத்தியானது என்பதால் கேள்வி மாறி, ''ஹாம்லெட் எழுதியபொழுது ஷேக்ஸ்பியரின் மனநிலை என்ன?'' என்று வரும்.

நம் காரியங்கள் கூடி வரும்பொழுது கேள்வி எழுவதில்லை. கெட்டுப் போகும்பொழுது கேள்வி எழுகிறது. கூடி வருவது பரம்பொருளால், கெட்டுப்போவதும் பரம்பொருளால் என்ற முடிவு மனத்தைக் குழப்புகிறது.

குழப்பத்திற்குக் காரணம் மனமில்லை, அதன் ஆதியான சத்திய ஜீவியமுமில்லை. நாம் அகந்தையுள்ளிருப்பதால், குழப்பம் அகந்தைக்கு எழுகிறது.

- காரியம் கூடிவந்தால் நேராகப் பூர்த்தியாகிறது.



- காரியம் கெட்டுப்போனால் வேறு பாதை மூலம் பிறகு கூடி வருகிறது.
- காரியம் கூடி வருவது திருவுள்ளம்.

  காரியம் கெட்டுப்போவது திருவுள்ளம்.

  நாம் கெட்டுப் போயிற்று என அறிவது இறைவன் காரியம் கூடி வருவதாகும்.

  **"கெட்டுப் போவதை'' "கூடி வருவதாக'' அறிவது பிரம்ம ஞானம்.**
- நெடுநாள் கழித்து யோசனை செய்தால் இதனுள் உள்ள அர்த்தம் புரியும்.
- நெடுநாள் கழித்துப் புரிவது காலத்திற்கு உட்பட்ட மனத்தின் செயல்.
- ''கெட்டுப் போகும்'' பொழுதே ''கூடிவருவதாக'' அறிவது காலத்தைக் கடந்த மனம்.
- காலத்தையும் அதைக் கடந்த நிலையையும் சேர்ப்பது சைத்தியப் புருஷன்.
- அந்நிலை துறவறத்தில் இல்லறம். அதற்குத் தோல்வியேயில்லை.
- பூரண யோகத்திற்குரிய நிலை - சைத்தியப்புருஷன்.

★ ★ ★

**743) உடலுணர்வே நிர்ணயித்தால் நாம் ஜடத்தில் - உடலில் - வாழ்கிறோம். விருப்பு வெறுப்புகள் உணர்வு நிலைக்குரியன. நல்லது கெட்டது மனத்திற்குரியன. தீமையற்ற நல்லது என மனம் அறிவது சத்திய ஜீவியம்.**

*ஜடத்தின் உடல் உணர்வு.*

களைப்பு மேலிட்டபொழுது, நாம் தூங்கும்பொழுது, உடலை மீற முடியாது. அது உடல் நிர்ணயிப்பதாகும். அதுபோல் ஒருவன் செயல்கள் உடலால் மட்டும் நிர்ணயிக்கப்பட்டால் அவன் ஜடமான மனிதனாவான். பொதுவாக நாம் மண்ணாங்கட்டி என்பது அவன் போன்றவர்களையேயாகும். உடலுணர்வுள்ளவன் சுறுசுறுப்பாக இருந்தால் அவன் சுறுசுறுப்பான மண்ணாங்கட்டியாவான்.

அறிவில்லாமல் சம்பிரதாயத்திற்காக ஆன்மீகப் பொக்கிஷங்களை கட்டாயப்படுத்தி குழந்தைகளை மனப்பாடம் செய்யச் சொன்னால், அறிவு வளராது, எரிச்சல் எழும். எரிச்சலை வெளிப்படுத்த முடியாவிட்டால் விரக்தி வரும். முடிவாக அவனுக்குச் சுறுசுறுப்பு வரும். அவனே சுறுசுறுப்பான மண்ணாங்கட்டி.

தெருவில் மேள சத்தம் கேட்டால் உள்ளே உட்கார முடியாது. கடைவீதி வழியே வரும்பொழுது கண்கவரும் பொருள்களைக் கடையுள்ளே கண்ணால் பார்த்தால் வாங்கவில்லை என்றாலும் உள்ளே போய்ப் பார்க்கத் தோன்றும். அவன் விருப்பாலும், அதன் எதிரான வெறுப்பாலும் உந்தப்படுவான்.

மனிதன் என்ன செய்வான்? பசி எடுத்தால் அத்தனையும் பறந்து போகும். பசித்தவன் எப்படித் திருடாமலிருக்க முடியாதோ அதுபோல் நம்மால் பல காரியங்களைச் செய்யாமலிருக்க முடியாது என்பதை எவரும் புரிந்துகொண்டாலும், அனைவரும் ஏற்கமாட்டார்கள். பசித்தால் திருடுபவனால் ஊரையோ, உலகத்தையோ, நாகரீகமான நல்ல பழக்கத்தையோ ஏற்படுத்த முடியாது. பசித்தாலும் புல்லைத் தின்னாது புலி என்பதே மனமுடைய மனிதன் நிலை. தேவையால் மட்டும் செயல்படுபவன் உடலாலான மனிதன். நியாயம் என்றால் மட்டுமே செய்பவன் நல்ல மனிதன்.

- ***உடலுக்குரிய மனிதன் உணர்வற்ற ஜடம்.***
- ***உணர்ச்சியால் செயல்படுபவன் உணர்வுள்ள விலங்கு.***
- ***நல்லது கெட்டது என்ற பாகுபாடுள்ளவனை நாம் மனிதன் என்கிறோம்.***

அன்னையும் பகவானும் கூறும் சத்திய ஜீவியம் இவற்றை எல்லாம் கடந்தது. நல்லது எனில் உலகில் உடனே தீமையிருக்கும். தீமை தனித்திருக்காது. எந்தக் கெட்ட மனிதனிடமும் ஒரு நல்ல குணமிருக்கும். மனிதன் அவற்றைப் பிரித்து நல்லதை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும்.



தீமையற்ற நல்லது, நிழலில்லாத ஒளி, பொய்க் கலப்பற்ற சத்தியம் மனித வாழ்விலில்லை. உலகை ஒளிமயமாக்கும் சூரிய ஒளிக்கே அவ்வுயர்வில்லை. சூரிய ஒளியை ஆன்மீகச் சட்டப்படி ஜடத்தின் ஒளி (material light) என்கிறார்கள். ஒளி, ஜோதி ஏற்பட்ட நேரம் ஜடம் சிருஷ்டிக்கப்படவில்லை. அதுவே ஆன்மீக ஒளி (spiritual light). அதன் முன் சூரியன் கறுமையாகக் காணப்படுகிறான். அதேபோல் (spiritual darkness) ஆன்மீக இருட்டின் முன் நடுப்பகலுக்கு எதிரான நள்ளிரவு ஜோதிமயமாகும்.

$$\text{சத்திய ஜீவியத்திற்குரிய நல்லது} \quad \frac{\text{தீமையற்ற நல்லது}}{\text{நல்லது X கெட்டது}}$$

கெட்டதற்கு எதிரான நல்லதன்று.

☆ ☆ ☆

### 744) மனம் தன்னைக் கடந்து செல்ல சத்தியம், நன்மை, அழகு, அனந்தம், ஆகியவற்றை நாடி அங்கு நிலைக்கவேண்டும்.

***மனத்தைக் கடந்த சத்தியம்.***

Self-existent Good, தீமையற்ற நல்லது என்பது ஆன்மீகக் கருத்து. ஸ்ரீ அரவிந்தர் இதைப் பெரிய Gயை உபயோகப்படுத்தி எழுதுகிறார். அடிக்கடி குறிப்பிடுகிறார். அதேபோல் Knowledge, Joy, Force, Peace, Silence, ஞானம், சந்தோஷம், சக்தி, அமைதி, மௌனம் ஆகியவற்றையும் குறிப்பிடுகிறார்.

நாம் ஒரு வேலைக்கு விண்ணப்பித்தால் நேர்முகத் தேர்வில் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது நம் அனுபவம், பட்டம், படிப்பு, பரிசு, நமக்குத் தெரிந்த பெரிய மனிதர்களைப் பற்றிப் பேசுவோம். “நான் திருடியதில்லை, ஜெயிலுக்குப் போனதில்லை, அடிதடி சண்டை எனக்குத் தெரியாது, பெண்களைக் கடத்தியதில்லை” எனக் கூறுவதில்லை. இதுபோன்ற நடவடிக்கைகள்

உள்ள ஊரிலிருந்து வரும் விண்ணப்பதாரரின் மனதில் இருப்பவை அவை. நம்மைப் போன்றவர் மனதில் அவை வருவதில்லை. ஏனெனில் அவை நம் வாழ்விலில்லை. நம்மை நல்ல குடிமகன், a good citizen என்பார்கள். திருடு, பொய், ஜெயில், சண்டை, கடத்தலறியாத குடிமகனை நல்லவன் என்கிறோம். ஆன்மாவின் அம்சங்களில் பல நன்மை, ஞானம், அழகு, சந்தோஷம். அவை மனித வாழ்வில் வந்தால் இங்குள்ள தீமை, அறியாமை, விகாரம், கவலையுடன் கலந்துவிடுகின்றன.

*ஆரம்பத்தில் நன்மைக்குத் தீமை தெரியாது. எதிரான அம்சம் இருப்பதே தெரியாது. அதுவே தீமையற்ற நன்மை.*

மனம், வாழ்வு, உடல் - கீழ் உலகம். சத்திய ஜீவியம், சச்சிதானந்தம் - மேல் உலகம். கீழ் உலகில் நல்லதும் கெட்டதும் கலந்துள்ளன. நாம் பிரித்து நல்லதை மட்டும் எடுத்துக்கொள்கிறோம். மேல் உலகில் கலப்பு இல்லை. நல்லது மட்டும் உண்டு.

- *கலப்பு மனத்திற்குரியது.*
- *கலப்பற்ற தூய்மை சத்திய ஜீவியத்திற்குரியது.*
- *கலப்பான நிலையைக் கடந்து கலப்பற்ற நிலையை அடைந்தால் மனத்தைக் கடக்கலாம்.*

நாம் எங்குள்ளோம் என எப்படி அறிவது?

மனத்தில் தவறு, குறை, கெட்ட எண்ணம், பொறாமை, சந்தேகம் எழுந்து அவற்றை விலக்கி நாம் முறையாகச் செயல்பட்டால் நாம் மனத்திற்குரியவராவோம். அவை எழாவிட்டால், எழுந்து விலக்கும் நிர்ப்பந்தம் இல்லாவிட்டால் நாம் மனத்தைக் கடந்த நிலையிலிருக்கிறோம். மடையனுக்கு சந்தேகம் எழாது. அவனுக்குச் சந்தேகம் எழும் அளவுக்கு அறிவில்லை. நாம் மடமையிலிருந்து செயல்படுகிறோமா? மனத்தைக் கடந்த நிலையிலிருந்து செயல்படுகிறோமா என நாம் அறிவோம்.



- *மனத்தில் தவறு இருந்து அதை விலக்கி, அதனால் பாதிக்கப்படாத முறையில் செயல்படுகிறோம். இது* overmental capacity *தெய்வங்கட்குரிய சக்தி.*
- *மனத்திலுள்ள குறையை ஆராய்ந்து அதனுள் உள்ள மெய்யைக் கண்டு அதன் மூலம் அதன் குறையை நிறைவாகச் சில சமயங்களில் மாற்றுகிறோம். அது சத்தியஜீவியத்திறமை.*
- *மனக்குறை நம் செயலைக் கெடுப்பது மனித நிலை, மனத்திற்குரிய நிலை.*

குரங்கு மரத்திலுள்ள பழத்தைத் தின்கிறது. நரி ஆட்டை அடித்துச் சாப்பிடுகிறது. எச்சில் இலைச் சோற்றை மனிதன் விரும்பி போட்டி போட்டு எடுத்துச் சாப்பிடுகிறான். விலங்கினமும், அதை ஒத்த மனிதனும் பசி என்பதால் நிர்ணயிக்கப்படுகிறார்கள். எச்சிலைச் சாப்பிடுபவன் சமூகத்தைச் சேர்ந்தவனில்லை. அவனைச் சமூகம் சேர்க்காது. எலியைக் கடித்துச் சாப்பிடும் பூனைக்கு மண், பாக்டீரியா, சுத்தம் கிடையாது. இவர்கள் ஜடத்தில் வாழ்பவர்கள். மனித நிலைக்குக் கீழ்ப்பட்டவர்கள்.

பங்காளி சண்டை, சம்பந்தி பூசல், பரம்பரை எதிரி என்பவர்கள் நட்பாலும், உறவாலும் வாழ்க்கையை நிர்ணயிப்பவர்கள். அரசியல் நண்பர்கள், எதிரிகள், வியாபாரக் கூட்டாளிகள், எதிரிகள் விருப்பு வெறுப்புக்குரியவர்கள். இவர்கள் உணர்ச்சிவயப்பட்டவர்கள். இவர்களிடம் நியாயம் பேசமுடியாது. வேண்டியவனானால் நியாயம், வேண்டாதவன் ஆனால் தப்பு என்பதே கொள்கை. நல்லது எது என நினைக்க இவர்கட்கு நேரம் இருக்காது.

இலஞ்சம், காப்பியடிப்பது, திருமணமானபின் மனைவியைப் பணத்திற்காகக் கடுமைப்படுத்துவது, பொய் சொல்வது, திருடுவது போன்ற தவறுகளைச் செய்யாதவர் பெரும்பாலோர். செய்ய விரும்பி மனச்சாட்சி தடை செய்வதைக் காண்பவர் வேறு நினைப்புள்ளவர்கள். இவர்கள் அனைவரும் மனம் உடையவர்கள். மனச்சாட்சியால் ஆளப்படுபவர்கள், மனச்சாட்சியைத் தெய்வமாகக் கருதுபவர்கள்.

முதல் வகையைச் சேர்ந்தவர்களை physical type ஜடம் என்றும், அடுத்த வகையினரை உணர்ச்சிவசப்பட்டவரெனவும் emotional type, மூன்றாம் வகையினரை ethical mental type நல்லதற்குக் கட்டுப்பட்டவரெனவும் பிரிக்கிறோம். இதைக் கடந்த நிலையொன்றுண்டு. அதுவே அன்னைக்குரியது.

ஒரு வாட்ச்மேன் நியமிக்கவேண்டி பலரைச் சந்தித்தால் அவர்களில் சிலர், ‘‘நான் திருடமாட்டேன், நான் வேலை செய்த இடங்களில் விசாரித்துப் பாருங்கள்’’ என்பார்கள். பட்டதாரிகளுக்கு வேலைக்குப் போகுமிடத்தில் அதுபோல் சொல்லத் தோன்றுவதில்லை. வாட்ச்மேன் வேலைக்கு வருபவர்கள் சிலர் திருட்டுப் பழக்கம் உள்ளவர்களாக இருப்பதால், மற்றவர்கள் தாம் அதிலிருந்து மாறுபட்டவர் எனச் சொல்ல வேண்டியிருக்கிறது. பட்டதாரிகளில் திருடுபவர்களில்லை என்பதால் அதுபோல் அவர்கள் பேசுவதில்லை.

- *முதல் வகையில் திருட்டுக் கூட்டத்தில் திருடாத நல்லவரும்,*
- *இரண்டாம் வகையில் திருட்டோடு சம்பந்தப்படாத திருடாதவரும் உண்டு.*

இது சமூகத்திலுள்ள நிலை. அனைவரும் அறிந்தது. அன்னை கேட்பது நாம் அறியாதது. வாழ்வு இன்ப துன்பமுள்ளது. நாள் இரவும், பகலுமானது. உலகம் நல்லது, கெட்டதாலானது. நாம் வாழ்வில் துன்பம், இருள், கெட்டதை விலக்கி, இன்பம், பகல், நல்லதை நாடுகிறோம். இதற்கடுத்த நிலையில் விலக்கப்பட வேண்டியதில்லை. ஏற்கப்படவேண்டியது மட்டுமே உள்ளது எனில் அதை நாம் எளிதில் புரிந்துகொள்வதில்லை. உதாரணங்களும் புரிய வைப்பதில்லை.

எந்தப் பள்ளி, கல்லூரியிலும் பரீட்சை முடிவுகள் தெரிந்தால், பாஸானவர்களும், பெயிலானவர்களும் இருப்பார்கள். ஒரு பள்ளியில் ‘‘எங்கள் பள்ளியில் பரீட்சை எழுதினால் பாஸ்தான், பெயில் என்பதில்லை. கல்லூரி ஆரம்பித்ததிலிருந்து யாரும் பெயிலாகவில்லை’’



என்று சொன்னால் அது நாமறிந்த பள்ளியிலிருந்து வேறுபட்டது. அப்படியும் ஒரு கல்லூரி, 60 பேர் எழுதினால் 40 I கிளாஸ், 20 II கிளாஸ், III கிளாஸ் இல்லை, பெயிலும் இல்லை என எப்பொழுதும் சொல்லும்படியும் அக்கல்லூரி விளங்கியது.

மனத்திற்கு இருபுறம் உண்டு. அவையே நல்லது, கெட்டது, இருள், ஒளி, உயர்வு, தாழ்வு போன்றவை. மனத்தைக் கடக்க தெய்வலோகத்தைத் தாண்டிப் போய் சத்திய ஜீவியத்தை எட்டவேண்டும். அங்கு இருளும், ஒளியும் இல்லை. சிறிய ஒளி, பெரிய ஒளியுண்டு; உயர்வு, தாழ்வு இல்லை. சிறிய உயர்வு, பெரிய உயர்வுண்டு; தெய்வங்களும் மனத்திற்குட்பட்டவர்களே. இவ்விஷயத்தில் அவர்களும் மனிதனைப் போன்றவர்கள்.

சத்திய ஜீவியத்தில் நல்லதுண்டு. அது கெட்டதற்கெதிரான நல்லதன்று, நல்லது. ஆங்கிலத்தில் பகவான் good X bad என்று நம் நிலையையும், சத்திய ஜீவிய நிலையை Good எனவும் capital letter பெரிய எழுத்தைப் பயன்படுத்தி எழுதுகிறார். தமிழில் பெரிய எழுத்து இல்லாததால், அதுபோல் குறிப்பிட முடியாது. சத்திய ஜீவியத்தில் கெட்டதில்லை, நல்லதுண்டு. அதேபோல் பொய் இல்லை, சத்தியம் உண்டு; விகாரமில்லை, அழகுண்டு; துன்பமில்லை, ஆனந்தம் உண்டு; வரையறை (limit) இல்லை, அனந்தம் உண்டு.

தற்காலிகமான வேலை, நிரந்தரமான வேலை என்ற பாகுபாட்டை நாம் அறிவோம். பெரிய அதிகாரி சிறிய அதிகாரியைக் கண்டிக்கிறார், தண்டிக்கிறார். பெரிய அதிகாரியை மந்திரி கண்டிக்கிறார். மந்திரியைச் சட்டம் கண்டிக்கும், தண்டிக்கும். ஹைகோர்ட் நீதிபதி வேலையைத் தற்காலிகமானதா, நிரந்தரமானதா எனக் கேட்பதில்லை. அவரை நியமித்தால் பிறகு 60 வயதில் அவர் ஓய்வு பெறுவார். அவருக்கு மேல் அதிகாரி என ஒருவரில்லை. கண்டிக்க மேலே எவரும் இல்லை; தண்டனை எழாது. அவர்கள் சட்டத்தைவிட உயர்ந்தவர்கள். சத்திய ஜீவியம் அதைப் போன்றது.

மனத்தைக் கடந்த நிலை அது போன்றது. நம் நாட்டில் நீதிபதிகள் 60இல், 65இல் ஓய்வு பெறுகிறார்கள். வேறு சில நாடுகளில் நீதிபதிகளுக்கு ஓய்வு பெறும் வயது என்று ஒன்று நிர்ணயிக்கப்படவில்லை. அவர்களே - நீதிபதிகள் - தான் ஓய்வு பெறுவதை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும்.

கீழ்மட்ட அதிகாரிகளுக்குப் புரியாத சட்டம், உரிமை, நிலைமை இது. வாழ்விலும் இதுபோன்ற இடங்கள் அரிபொருளாக இருக்கின்றன. அடிக்கடி நம் கண்ணில் பட்டதில்லை.

''நான் அகந்தையால் செய்த ஆர்ப்பாட்டங்கள் ஆயிரம். அத்தனையும் என் கணவர் பொறுத்துக்கொண்டார். நிலைமை மீறியபொழுது ஓர் அடி அடித்தார். அந்த அடி பட்டவுடன் அவர் மீது எனக்கு அன்பு சுரந்தது'' என்ற மனைவியின் அனுபவம் தாம்பத்தியத்தில் உள்ளது எனினும், கணவன் அடித்தால் கோபம் வருவதுதான் இயற்கை. அடிபட்டாலும் சுரப்பது அன்புதான் என்ற உறவு, அதற்குரிய உள்ளம் உயர்ந்தது. மனித வாழ்வில் அந்த உள்ளமும் ஆர்ப்பாட்டம் செய்கிறது.

***அந்த உறவில் ஆர்ப்பாட்டம் செய்யும் மனநிலையில்லை எனில், அன்பு மட்டுமே சுரக்கும் ஆனந்த உறவாகும் அது. அதுவே வெறுப்பொழிந்த அன்பாகும்.***

✯ ✯ ✯

**745) உடலாலானவன், உணர்வாலானவன், மனமுடையவன் அல்லன். அவனால் மனத்தைப் பயன்படுத்த முடியாது. மனத்தால் சிந்திக்க அவன் முதலில் மனத்தைப் பெற வேண்டும். அதேபோல் நன்மையைக் (good) கருதும் நிலை அவனுள் இல்லை. அதைச் செய்ய சத்திய ஜீவியத்தைப் பெறவேண்டும். ஜீவனின் பகுதிகளாலான ஒரு புருஷனை (உ.ம். மனோமயப் புருஷனை) நாடுவதால் இதைப் பெற முடியாது. சைத்தியப் புருஷனை நாடினால் இது முடியும். பகவான் பத்து வருஷமாகத் தேடிய இரகஸ்யம் இது.**

***பூரணயோகம்*** **பரிணாம ரகஸ்யம்.**

பகவான் ஸ்ரீ அரவிந்தர் தேடியது சுதந்திரம், யோகமில்லை. சுதந்திரத்திற்காக யோகத்தை நாடினார். மௌனம், பிரம்ம ஞானம், அத்துவைத சித்தி, நிர்வாணம் ஆகிய சித்திகள் அவரை நாடி குறுகிய காலத்தில் வந்தன. "ராஜயோகத்தை 3 நாளில் செய்தேன்" என குத்துமி கூறுவதாகத் தம் பாடலில் எழுதுகிறார். ஜெயிலில் சுவாமி விவேகாநந்தர் கையில் கீதையைக் கொடுத்து 15 நாள்வரை தினமும் ''வந்து'' நீ தேடுவது எதுவும் தேவையில்லை, நாடவேண்டியது ''இது''தான் என சத்திய ஜீவியத்தைச் சுட்டிக்காட்டினார். பின்னர் பகவானுக்கு அது பலித்தது. இது என்ன?

- மனிதன் தான் உடலோ, மனமோயில்லை, ஆன்மா என அறிந்து உடலிலிருந்து பிரிந்து ஆன்மாவின் பிறப்பிடமான பரமாத்மாவை அடைவது மோட்சம்.
- மனிதன் மோட்சம் பெறுவது திருவுள்ளமில்லை.
- **உலகில் பரமாத்மா வந்து வாழ்ந்து பூலோகம் சுவர்க்கமாவது திருவுள்ளம்.**
- இதை மனோமயப் புருஷன் மட்டும் செய்ய முடியாது.
- நாம் ஆதியும் அந்தமுமில்லாததாக அறியும் ஆன்மாவுக்கு ஆதியும் அந்தமும் இடையே வளர்ச்சியும் உண்டு. அதை spiritual evolution ஆன்மீகப் பரிணாமம் என்கிறார் பகவான்.
- அது நடைபெறும் முனை பிரகிருதியின் ஆன்மாவெனும் சைத்தியப் புருஷன்.
- ஞான யோகத்தால் விடுதலை பெற்ற ஜீவாத்மா நேரே பரமாத்மாவை அடைகிறது.
- சைத்தியப் புருஷன் பிரகிருதியினின்று விடுதலை பெற முயலாமல் பிரகிருதியை மனத்திலிருந்து மௌனம், ஜோதி, ஞானம், தெய்வீகம் மூலமாக சத்திய ஜீவியத்திற்குக் கொண்டு போகிறது. இப்பரிணாமத்தில் சைத்தியப் புருஷன் ஈஸ்வரனாக மாறுகிறது.

❂ மேலிருந்து சிருஷ்டி கீழே வந்த பாதை மூலம் மீண்டும் மேலே போவதாகும் இது.

❂ ஜீவாத்மா தானே நேரடியாகப் பரமாத்மாவை அடைவது முழுமையன்று. பிரகிருதி விட்டுப்போகிறது. பிரகிருதி ஆன்மீக வளர்ச்சி பெற்றுயர்வது பரிணாமம். இதன் பாதை சிருஷ்டியின் பாதை.

**சுவாமி விவேகாநந்தர் காட்டிக் கொடுத்த இலக்கையடைய பகவான் ஸ்ரீ அரவிந்தர் இந்த உபாயத்தைக் கண்டுபிடித்தார். அதற்கு அவருக்கு 10 ஆண்டுகளாயின.**

பகவான் கண்ட யோக இரகஸ்யத்தை அவர் இரகஸ்யமாக வைத்திருக்கவில்லை. தம் நூல்களில் அவற்றை விவரித்தார். சாதனையாக யோகத்தை மேற்கொண்டவர்கள் மேலும் கேட்பதொன்றுண்டு, ''எப்படி ஆரம்பிப்பது''. அதை பகவான் கூறியிராவிட்டால், அதை நாம் இந்த 50 ஆண்டுகளில் கண்டுபிடித்திருக்க முடியாது. அதையும் விவரமாக எழுதினார். அவ்வுபாயம் சரணாகதி. அதற்கும் முந்திய நிலையுண்டு. அதையும் கூறியுள்ளார். அதன் பெயர் சமர்ப்பணம். சமர்ப்பணத்தை மேற்கொள்ள பக்குவமான மனநிலையுண்டு. அதை அன்னை Psychic Education சைத்தியக் கல்வி என்ற தலைப்பில் 6 விதிகளாகக் கூறுகிறார். அறிவை நம்பாமல், உடலைப் பேணாமல், உணர்வை வருத்தாமல், எந்த நேரமும் இறைவனை நோக்கி முன்னேற, புறத்தில் அகத்தைக் காணுதல் பக்குவம் தரும்.

பகவான் அத்துவைத சித்தி பெற்றதையும், நிர்வாணமடைந்ததையும் (poems) செய்யுளாக எழுதியிருக்கின்றார். ஆரம்பத்திலேயே அவருக்கு இந்தச் சித்திகள் கிடைத்தன. காஷ்மீரத்தில் மலை மீது உலவும்பொழுது சித்தி தம்மை நோக்கி வந்ததையும் குறிப்பிடுகிறார்.

மோட்சம் என்பது அவருக்கு உரியது. ஆனால் அது அவரது இலட்சியமுமில்லை, இலக்கும் இல்லை. உலகைத் திருவுரு மாற்றவேண்டும், மரணம் அழியவேண்டும், சத்திய ஜீவன்



பிறக்கவேண்டும் என்பவை அவர் எண்ணம். தியானத்தில் அமர்ந்தால் மனம் தூய்மைப்பட்டு, நிலைத்து, உயர்ந்து ஆன்மாவைத் தொட்டு அதனுடன் கலந்து, ஆன்ம விடுதலைக்குரிய நிலை ஏற்படுவது அவருக்கு சகஜமானபின், அதை அவர் நாடாமல், எப்படி சத்திய ஜீவியத்தை அடைவது, அடைந்தபின் எப்படி அதை உலகுக்குக் கொணர்வது என்று யோக நிலைக்குரிய ஆராய்ச்சியை மேற்கொண்டார்.

1943இல் வங்காளப் பஞ்சம் வந்தது. 30 லட்சம் பேர் இறந்தார்கள். 1950க்குப் பின் சைனாவில் பஞ்சம் வந்தது. அதைவிட அதிகம் பேர் இறந்ததாகச் சொல்கிறார்கள். ஐரோப்பாவில் black death வந்தபொழுது ஜனத்தொகையில் ஒரு பகுதி இறந்தனர். பன்னிரண்டாண்டு வற்கடம் (பஞ்சம்) என்ற சொல் தமிழ் இலக்கியத்தில் அடிக்கடி காணப்படுவது. 12 ஆண்டு மழை பெய்யாமல் ஊரை விட்டுப் போய், மழை பெய்ய ஆரம்பித்தபின் வந்ததை வரலாறு அறியும். 1965இல் பஞ்சம் ஏற்பட்டது. வெளிநாட்டுத் தானியம் வாங்கி ஒரு வருஷம் சமாளித்தால், ஒவ்வோர் ஆண்டும் 100 கோடி, 150 கோடி ரூபாய் எனத் தானியம் வாங்க வேண்டியிருந்தபொழுது, இது தவிர்க்க முடியாதது என உலகில் அனைவரும் நினைத்தனர். புத்தர் மரணம், காசநோயைக் கண்டு தவமிருந்து ஞானோதயம் பெற்று மரணத்தை வெல்ல முடியாது என்று முடிவு செய்தார். அந்த முடிவை பகவான் ஏற்க மறுத்தார். C.சுப்ரமணியம் பஞ்சம் தவிர்க்க முடியாது என்பதை ஏற்க மறுத்தார். மறுத்தது சரி, எப்படிப் பஞ்சத்தை தவிர்ப்பது? சுப்ரமணியம் கண்டது, ''உலகில் விவசாய விஞ்ஞானம் வளர்ந்துள்ளது. அது இங்கு வந்தால் பஞ்சம் தவிர்க்கப்படும். உற்பத்தியைப் பெருக்க முடியும்''. அதை எப்படி நிறைவேற்றுவது, யார் நிறைவேற்றுவது என்பது சுப்ரமணியத்தின் கேள்வி. விவசாய விஞ்ஞானிகள் விவசாயியை அணுகி விஞ்ஞான அறிவின் பலனை நடைமுறையில் காட்டவேண்டும். அதைச் செய்தால் உற்பத்தி பெருகும் என்று முடிவு செய்தார். அதையும் செய்தபின் விவசாயி புதுமுறை

பயிரை ஏற்றால் நாடு பஞ்சத்தை ஒழிக்கும் என்று தெளிவு பெற்றார். விஞ்ஞானிகளும் அதைச் செய்தனர். விவசாயிகளும் அதை ஏற்றனர். நாடு மாறியது.

பகவான் மரணத்தை வெல்ல முடியாது என்பதை ஏற்க மறுத்தார். சத்திய ஜீவியம் மரணத்தை வெல்லும் என்று கண்டார். எப்படி சத்திய ஜீவியத்தை அடைவது என அவருக்குத் தெரியவில்லை. அவர் அடைந்த சச்சிதானந்தம் சத்திய ஜீவியத்தைவிட உயர்ந்தது. என்றாலும் சச்சிதானந்தம் மரணத்தை வெல்லலாம், சத்திய ஜீவியம் வெல்லும். அன்னமயப் புருஷன், பிராணமயப் புருஷன், மனோமயப் புருஷன், ஜீவாத்மா மூலம் மோட்சம் பெறலாம். சத்திய ஜீவனை அடைய முடியாது. பத்து வருஷம் அவருடைய முயற்சியால் சைத்தியப் புருஷனை நாடினால், அவன் மூலமாக ஜீவாத்மாவுக்குப் போனால், சத்திய ஜீவியத்தை அடையலாம், அடைந்தால் சத்திய ஜீவியத்தை உலகுக்குக் கொண்டுவரலாம் என்று கண்டார். கண்டதைப் பயின்று வெற்றி கண்டார். சத்திய ஜீவியத்தை அவர் அடைந்தார். உலகுக்கும் கொண்டுவந்தார்.

புதுமுறை விவசாயத்தை மக்கள் ஏற்கவில்லை என்றால் சுப்ரமணியத்தின் முயற்சி ஏட்டளவிலிருக்கும், நாட்டுக்குப் பலன் தந்திருக்காது. பகவான் சத்திய ஜீவியத்தை உலகுக்குக் கொண்டு வந்த பின்பு உலகம் மரணத்தை வெல்ல, சைத்தியப் புருஷனை நாடவேண்டும். உலகம் அதை நாடவில்லை. என்றாலும் ஒரு சிலர் (10, 12 பேர்) நாடினால் உலகம் அவர்கள் மூலம் மரணத்தை வெல்லும். அன்னை தவிர வேறொருவரும் அதை இலட்சியமாக ஏற்கவில்லை என்பதால், பகவான் சூட்சுமத்தைக் கண்டும், வெற்றி பெற்றும், உலகம் அதன் முழுப் பயனை, இந்திய விவசாயி பெற்றதுபோல் பெறவில்லை. தம் சூட்சும இரகஸ்யத்தை உலகுக்கு பகவான் வெளியிட்டும், அதைப் பாராட்டியவரில்லை.

✯ ✯ ✯

*தொடரும்....*



# இம்மாதச் செய்தி

## உலகம் அறியாத உயர்ந்த இன்பம் அன்னையின் ஸ்பர்சம்.

**Man does not know the divine joy or peace, etc., but all devotees have been touched by the loving grace of joy or peace.**

***ஜீவிய மணி***

சத்தியம் பாதுகாப்பின் கோட்டை.

கர்மயோகி

## XI. Delight of Existence : The problem

*Page Nos. 92 & 93*
*Para No. 5*

This is the ancient Vedantic theory.
It is the theory of cosmic origins.
The human mind has two questions.
Those questions arise at once.
One is an emotional question.
The other is a sensational issue.
Pain is one, evil is the other.
They confront that theory.
We say the world is Sachchidananda.
The world is an expression of Sachchidananda.
It is not only of existence but of consciousness.
It is not only consciousness but of self-delight.
That self-delight is infinite.
We can admit the world is consciousness.
If this is true, how do we explain pain?
How can we explain grief and suffering?
We take a good look at this world.
It has an appearance to us.
It appears as a world of suffering.
It does not appear as a world of delight.



## 11. ஆனந்தம் - கேள்வி

இது வேதாந்தம்.
சிருஷ்டியை விளக்கும் தத்துவம் இது.
மனிதனுக்கு இரு கேள்விகள் உள்ளன.
அக்கேள்விகள் உடனே எழுகின்றன.
ஒன்று உணர்ச்சியைப் பற்றியது.
அடுத்தது வலியைப் பற்றியது.
வலி, தீமை அவை.
வேதாந்தத்திற்கு முன் அவை எழுந்து நிற்கின்றன.
உலகம் சச்சிதானந்தம் என்கிறோம்.
உலகம் சச்சிதானந்த வெளிப்பாடு.
உலகம் சத் மட்டுமன்று, சித்தும் ஆகும்.
உலகம் சித் மட்டுமன்று, ஆனந்தமுமாகும்.
சுய ஆனந்தம் அனந்தம்.
உலகம் ஜீவியமானது என்று ஏற்கலாம்.
அது உண்மையானால், துன்பத்தை எப்படி விளக்குவது?
கவலை, வலி, சோகம் என்பவற்றை எப்படி அறிவது?
உலகை நாம் நன்கு கவனிப்போம்.
நாம் உலகின் தோற்றத்தைக் காண்கிறோம்.
அது துன்பமயமான உலகமாகக் காண்கிறது.
இன்பமயமாக உலகம் காட்சியளிக்கவில்லை.

**It is only a view.**

**It is an exaggeration.**

**It is an error of perspective.**

**We can be dispassionate.**

**We shall try to know accurately.**

**Let us appreciate the world unemotionally.**

**Then we see the truth.**

**Let us know the sum of pain of existence.**

**Let us also know the sum of pleasure of existence.**

**We now see pleasure is more than pain.**

**(In one individual, it may be different)**

**Our existence is active.**

**It is also passive.**

**Our existence is on the surface.**

**Existence also underlies the surface.**

**It is the normal state of nature.**

**Pleasure is, we find, our normal state.**

**Pain is a contrary occurrence.**

**But it is temporary.**

**Here lies the reason for us to feel pain acutely.**

**The larger sum of pleasure is unseen.**

**The lesser sum of pain looms large.**

**Pain, therefore, affects us more acutely.**

**Precisely because pleasure is normal, we do not treasure it.**

**We hardly observe the pleasure in our life.**



**இது நம் கண்ணோட்டம்.**

**சற்று மிகைப்படுத்தப்பட்ட கண்ணோட்டமிது.**

**இது நம் நோக்கத்தின் குறை.**

**நாம் விருப்பு வெறுப்பில்லாமல் காண முயல்வோம்.**

**துல்லியமாகக் காண முயல்வோம்.**

**உணர்ச்சி வசப்படாமல் உலகை அறிவோம்.**

**அப்பொழுது உண்மை விளங்கும்.**

**உலகில் உள்ள மொத்த வலியையறிவோம்.**

**உலகில் உள்ள இன்பத்தின் தொகுப்பைக் காண்போம்.**

**இன்பம் மிகையாக இருப்பது தெரிகிறது.**
**(தனிப்பட்ட ஒருவர் விதிவிலக்காக இருக்கலாம்)**

**வாழ்வு சுறுசுறுப்பானது.**

**வாழ்வு எதிராகவுமிருக்கும்.**

**நம் வாழ்வு மேலெழுந்தது.**

**அடியிலும் வாழ்வுள்ளது.**

**இதுவே இயற்கையின் இயல்பு.**

**இன்பம் இயல்பானது என்ற தெளிவு ஏற்படுகிறது.**

**வலி என்பது எதிரானது.**

**வலி தற்காலிகமானது.**

**ஏன் வலி முக்கியமாக இருக்கிறது என்பதற்கு இதுவே காரணம்.**

**வாழ்வு முழுவதும் உள்ள இன்பம் தெரிவதில்லை.**

**சிறிதளவுள்ள வலி மட்டுமே இருப்பதாகத் தெரிகிறது.**

**அதனால், வலி மிகைப்பட்டுக் காண்கிறது.**

**இன்பம் இயல்பானது என்பதால் நாம் அதன் அருமையை உணர்வதில்லை.**

**நம் வாழ்வில் சந்தோஷத்தை நாம் கவனிப்பதில்லை.**

**Sometimes pleasure intensifies into an acute form.**

**Its acute form is ecstasy or a crest of joy.**

**We call this crest of joy, delight.**

**We seek ecstasy and delight.**

**Normally there is satisfaction in life.**

**It is always there.**

**It is there regardless of events or particular causes.**

**We take everything neutrally.**

**Rather we take it for granted.**

**It is neither pleasure nor pain.**

**It is there as a great practical fact.**

**It is universal.**

**It is an overpowering instinct of life.**

**It is our self-preservation.**

**But we do not seek it, as it is there.**

**Our joy is our profit.**

**Our pain is our emotional loss.**

**They draw our balance sheet.**

**We do not enter our profit and loss properly.**

**Only our positive pleasures are entered there.**

**Our discomfort is entered as loss.**

**Pain is entered as debit.**

**Pain affects us more intensely.**

**It is so as it is abnormal.**

**It is not normal to our being.**



**சில சமயங்களில் இன்பம் உயர்ந்து தீவிரமாகும்.**

**பூரிப்பு அதன் தீவிரம். ஆனந்தத்தின் அலை எனலாம்.**

**ஆனந்த அலையை நாம் பேரானந்தம் என்போம்.**

**நாம் பூரிப்பையும், ஆனந்தத்தையும் நாடுகிறோம்.**

**பொதுவாக வாழ்வில் திருப்தியுண்டு.**

**அது எப்பொழுதும் உள்ளது.**

**அது நிகழ்ச்சிகளையோ, ஒரு குறிப்பிட்ட காரணத்தையோ பொருத்ததன்று.**

**இவையெல்லாம் நம் கணக்கில் சேரா.**

**இவை இருப்பது, இருக்க வேண்டியவை என நாம் கருதுகிறோம்.**

**இது இன்பமுமில்லை, துன்பமுமில்லை.**

**அது நடைமுறைக்குரிய பெரிய யதார்த்தமான செயல்.**

**அது பொது.**

**வாழ்வுக்கு இது முக்கிய உணர்வு.**

**நாம் நம்மைக் காப்பாற்றுவது இது.**

**இது இருப்பதால், நாம் இதைத் தேடுவதில்லை.**

**இன்பம், லாபம்.**

**துன்பம் உணர்வுக்கு நஷ்டம்.**

**இவையிரண்டும் நம் வரவு செலவுக் கணக்கு.**

**நாம் நம் வரவையும், செலவையும் சரிவர எழுதுவதில்லை.**

**பெரிய சந்தோஷங்களை மட்டும் அதில் குறிக்கிறோம்.**

**நம் தொந்தரவுகளையும் எழுதுகிறோம்.**

**வலியைச் செலவுக்கணக்காக எழுதுகிறோம்.**

**வலி நம்மை அதிகமாகப் பாதிக்கிறது.**

**வழக்கத்திற்கு மாறாக இருப்பதால் அதிக பாதிப்பு.**

**வலி நம் ஜீவனுக்கு வழக்கமானதில்லை.**

It is contrary to our natural tendency.

Pain is experienced as an outrage.

It is an outrage on our existence.

Pain is an offence on what we are.

It is an external attack on what we seek to be.

Ours is a philosophical inquiry. *Page No. 93*

This is not downright practice. *Para No. 6*

As long as pain is there, we must explain it.

Whether the sum of pain is greater or lesser is not the issue.

Whether it is abnormal or not does not matter.

The fact is, pain is there.

It is present in man.

The whole problem is its presence.

We say, all is Sachchidananda.

Then, how can pain enter or exist?

How do we understand suffering?

This is the real problem.

There is a further confusion.

It is a false issue.

We assume an extracosmic God.

It is a partial issue.

It is the ethical difficulty.

The farther confusion comes from this idea.

*Contd...*

☆ ☆ ☆



நம் இயல்பான வாழ்க்கைக்கு வலி மாறானது.

வலியை நாம் பெரிய தவறாகக் கருதுகிறோம்.

சிருஷ்டியின் வாழ்வுக்கு வலி ஒரு தடை.

நாம் வாழ நினைக்கும் பாணிக்கு வலி ஒரு எதிர்ப்பு.

நாம் தேடும் இலட்சியத்தைப் புறத்தில் எதிர்ப்பது வலி.

நாம் பேசுவது தத்துவம்.

இது அன்றாட நடைமுறையில்லை.

வலி இருப்பதால், அதை விளக்குவது அவசியம்.

வலியின் தொகுப்பு பெரியதா, சிறியதா என்பது பேச்சில்லை.

வலி வழக்கத்திற்கு மாறானதா, இல்லையா என்பதும் பிரச்சினை இல்லை.

வலியிருப்பது உண்மை.

மனிதன் வலியை அறிவான்.

ஏன் வலியிருக்கிறது என்பதே கேள்வி.

அனைத்தும் சச்சிதானந்தம் என்கிறோம்.

அப்படியானால் வலி எப்படி வரும், இருக்கும்?

துன்பத்தை நாம் எப்படிப் புரிந்து கொள்வது?

அதுவே உண்மையான பிரச்சினை.

மேலும் ஓர் குழப்பம் உண்டு.

அது பொய்யானது.

உலகுக்கு வெளியில் கடவுளிருப்பதாக நாம் நினைக்கிறோம்.

இது பகுதி.

இது தார்மீகமான சிரமம்.

இப்படி நினைப்பதால் பெருங்குழப்பம் எழுகிறது.

*தொடரும்...*

☆ ☆ ☆

## P.28. Lain in the arms of Eternal's Peace.
**பிரம்ம சாந்தியின் மடியில் தவழுதல்**

- ❒ **பிரபஞ்சத்தின் இதயம் அவனுள் துடித்தது.**
- ❒ **சப்த பிரம்மம் ஜனிக்கும் குகைவாசம்.**
- ❒ **சுவர்க்கம் சக்தியாகி மனத்தின் உறுதியை மகிழ வைக்கிறது.**
- ❒ **பிரம்மாமிர்தம் பிரகிருதியின் பஞ்சாமிர்தம்.**
- ❒ **உலகம் உலகநாதனின் உருவம்.**
- ❒ **சாட்சி புருஷனின் சூட்சுமக் குகைகள்.**
- ❒ **மறைந்த இரகஸ்யங்கள், இருட்டான திருட்டு வழிகள்.**
- ❒ **அகக் கண் திறந்து அனைத்தையும் கண்டது.**
- ❒ **கண்டமாகாத காலத்தின் கணக்கில்லாத கதவுகள்.**
- ❒ **ஊனான உடலின் திரையான இருள்.**
- ❒ **ஆதிசேஷன் காக்கும் அற்புத வாயில்.**
- ❒ **பளபளக்கும் பாதையைப் பளிச்செனக் கண்டனர்.**
- ❒ **மௌன இதயத்தின் மோன கீதம்.**
- ❒ **புலப்படாத இடத்துப் புதுமை எழுந்தது.**
- ❒ **சூன்ய அமைதி சூழ்ந்து நின்றது.**
- ❒ **கற்பனைக்கெட்டாத கருத்து நடை பயிலும் அரங்கம்.**
- ❒ **கடந்ததைக் கடந்த பரவெளி.**
- ❒ **இரகஸ்யக் குரல் கேட்கிறது.**
- ❒ **ஞானத்திற்குச் சொந்தமான சொல்.**
- ❒ **அக உலகத்தின் பளிங்குக் கதவுகள்.**
- ❒ **புத்துணர்வும், புதுப்பொலிவும் புல்லரிக்கும் வாழ்வு.**



- ❒ **மேலுலகத் தரிசனம் மேன்மையாக எழுந்தது.**
- ❒ **வானுலகம் வையகமாகும் வாழ்க்கைச் சுவடுகள்.**

சாந்தியை அமைதி என்கிறோம். ஆர்ப்பாட்டமற்றது அமைதி. ஆன்மீகத்தில் அமைதி என்ற சொல்லுக்கு வழக்கில் இல்லாத பொருள் உண்டு. உறுத்தும் மனச்சாட்சிக்கு அமைதி கிடையாது. உறுத்தாத மனச்சாட்சிக்குப் பயம் கிடையாது. அமைதி அடுத்த கட்டத்திற்குரியது. மனம் சாட்சியை ஓர் உருவகத்தால் பெறுகிறது. சாட்சியை உருவாக்கியுள்ளது. உருவான சாட்சியை உறுத்தாமலிருப்பது அமைதியான வாழ்வு. **சாட்சியின் உருவகம் கலைந்தால் கலைவது மனச்சாட்சியில்லை. மனம் கரையும். அது குழந்தையுள்ளம். அதுவே ஆன்மீக அமைதி.** அமைதியான குழந்தை மனிதனாகி, மனச்சாட்சி பெற்று அது உறுத்தும்படியோ, உறுத்தாத வகையோ வாழ்கிறான். ஆன்மா விழிப்புற்றால், மனம் ஆன்ம ஜோதியில் அறிவை ஞானமாக்கி தன்னை அணுஅணுவாக இழந்து, கரைந்து மறைகிறது. மனம் மறைந்தபின் சாட்சி சொல்ல ஒருவரில்லை.

ஆன்மா மனத்தைக் கரைத்து அமைதி வழங்கும்.

பிரம்மம் மனத்தை பிரம்மமாக உயர்த்தி அமைதியை ஆன்மீகமாக்கும்.

✯ ✯ ✯

### ஸ்ரீ அரவிந்தம்

நோக்கம் என்பதே மனிதன். ஞானம், பக்தி, செயல் சேருமிடத்தில் மனிதனுக்கு நோக்கம் பிறக்கின்றது என்பதால் பகவத் கீதை நோக்கத்தைச் சரணம் செய்யச் சொல்கிறது.

*நோக்கமே மனிதன்.*

அன்பர் - கடந்த 2 வருஷமாக எனக்குப் பல நடந்துள்ளன. வேலையில் சேர்ந்து 10 வருஷமாகக் கிடைக்காதது எல்லாம், இந்த 2 ஆண்டாகக் கிடைத்து உள்ளது. இதுவரை கிடைக்கவேண்டியது கிடைக்கவில்லை. இப்பொழுது அப்படித் தவறிய அனைத்தும் கிடைத்துவிட்டன. **நான் எதிர்பாராதது, என் ஜாதகத்தில் இல்லாதது, என் அந்தஸ்திற்கு மேற்பட்டது எனப் பல விஷயங்கள் தொடர்ந்து வருவது ஆச்சரியமாக இருக்கிறது.** அதில் எதுவும் பலிக்கவில்லை. வருகின்றது, நடக்கும் போலிருக்கிறது, இல்லை என்றாகிறது.

நண்பர் - இந்த அனுபவம் அன்பர்களுக்குண்டு. பலர் கவனிப்பதில்லை.

அன்பர் - வந்தது பலிக்க வழியுண்டா? ஜாதகம் அடிக்கடி பார்க்கிறேன். அவன் சொல்வதற்கும், நடப்பதற்கும் சம்பந்தமில்லாமலிருக்கிறது. எனக்குப் பிரமோஷன் வந்த பிறகு ஜாதகம் பார்த்தேன். இன்னும் 3 ஆண்டுகட்குப் பிரமோஷனில்லை என்றான். என் மாமனார் ஒரு புதிய தொழில் செய்யச் சொன்னார். எனக்கு ஒரே பயம். ஜாதகம் பார்த்தேன். ஜாதகத்தில் அப்படி எதுவும் தெரியவில்லை என்கிறான்.

நண்பர் - ஜாதகம் 10 முறை பார்த்தீர்களே. அன்னை என்ன சொல்கிறார் என எத்தனை முறை படித்தீர்கள்?

அன்பர் - எனக்கு அது தோன்றவில்லை. விஷயம் என்றால் ஜாதகம் பார்ப்பேன்.



நண்பர் - **ஜாதகம் பார்க்கும்வரை எதுவும் பலிக்காது. வருவது ஜாதகப்படி வரவில்லையே.**

அன்பர் - எப்படி ஜாதகம் பார்க்காமலிருப்பது? நிறுத்திவிடட்டுமா?

நண்பர் - பார்ப்பது, பார்க்காதது விஷயமில்லை. ஜாதகத்தை மனம் நம்பும்வரை எந்தப் பெரிய நல்லதும் அன்னை மூலம் வாராது. ஜாதகம் தவறில்லை. அது பார்ப்பவர்க்கு சரி. அன்பர்கட்குச் சரி வாராது. சம்பளத்திற்கு வேலை செய்வது தவறு என்று கூற முடியுமா? தொழில் ஆரம்பித்தபின் சம்பளத்திற்கு வேலை செய்வது தவறு என்று கூறமுடியுமா? தொழில் ஆரம்பித்த பின் சம்பளத்திற்குப் போகமுடியுமா? உங்களுக்கு ஜாதகம் போல பல வேலைகள் அன்னைக்கு ஒத்து வாராதன இருக்கின்றன. **சூழல் பலமாக இருப்பதால் பல வாய்ப்புகள் வருகின்றன. சுபாவம் சூழலைவிட வலிமையாக இருப்பதால், வந்தது பலிக்கவில்லை.**

அன்பர் - அது எனக்கு முதலிலிருந்து தெரியுமே. எனக்குக் கல்யாணம், விசேஷம் என்றால் உயிர். ஒன்று விடாமல் போய்வருவேன். நான் ஒரு நோட்டு வைத்திருக்கிறேன். எந்தக் கல்யாணத்திற்குப் போனாலும், புதியதாய் அறிமுகமான சொந்தக்காரர்கள் பெயரையும், விலாசத்தையும் குறித்துக் கொள்வேன். ஆபீசில் யாருக்காவது ஒன்று என்றால் நான்தான் முன் நிற்பேன். அன்பர்கள் அப்படியில்லை. என்னை ஒன்றும் சொல்வதில்லை. நான் ஜீவனோடு அனைவரிடமும் கலந்துகொள்வேன். வாரம் 2, 3 முறை கடைக்குப் போனால்தான் மனம் நிம்மதியாக இருக்கும். இதெல்லாம் நல்லதில்லையா?

நண்பர் - You are a perfect social person, popular too. சமூகத்துடன் நீங்கள் ஒன்றி வாழ்பவர். இதில் என்ன தவறு? நல்லதுதானே.

அன்பர் - வரும் வாய்ப்புகள் தவறுவதற்கும், இந்த வாழ்விற்கும் தொடர்புண்டா?

நண்பர் - சற்று யோசனை செய்து பார்த்தால் 2 ஆண்டுகளில் நீங்கள் சுமார் 18 திருமணங்கட்கு போயிருந்தால், அன்னையிடம் வந்தபின் 2 ஆண்டுகளில்....

அன்பர் - 50க்கு மேற்பட்ட திருமணங்கட்குப் போனேன்.

நண்பர் - **உங்கள் விருப்பம் வளர்ந்துள்ளதே. அந்நிலையிலுள்ள வாய்ப்புகள் அனைத்தும் பலித்திருக்குமே.**

அன்பர் - அது உண்மைதான். என் சம்பளம் ரூ.21,000. என் மாமனார் நண்பர் 8 கோடியில் தொழில் ஆரம்பிக்கிறார். அங்கு ஜெனரல் மேனேஜராக என்னைக் கூப்பிட்டார். 35,000 சம்பளம். பிறகு டைரக்டராக்குகிறேன் என்கிறார். இதுபோன்று வந்த வாய்ப்பு எதுவும் பலிக்கவில்லை.

நண்பர் - உங்கள் சுபாவமும், இந்த வாய்ப்பும் மாறுபட்டவை.

அன்பர் - இந்த வாய்ப்புப் பலிக்குமா? அதற்கு நான் என்ன செய்யவேண்டும்.

நண்பர் - பலிக்க வேண்டும் என நினைத்தால் ஜுரம் வரும்.

அன்பர் - இப்பொழுது நினைவுக்கு வருகிறது. மாமனார் சொல்லியவுடன் எனக்குப் பல நாள் ஜுரம். அப்படியெனில் பலிக்காதா?



நண்பர் - பலிக்க வேண்டும் எனப் பிரியப்பட்டால் ஜுரம் வந்தது போகாது.

அன்பர் - ஏன்?

நண்பர் - நீங்கள் social personality நாலு பேருடன் கலந்து பிரியமாகப் பழகுபவர். 8 கோடி கம்பனி மானேஜர் பொறுப்பு அதிகம். **உங்கள் நிலைமைக்கு மீறிய பொறுப்பை ஏற்றால் உடல் புண்ணாக வலிக்கும். 6 மாதம், 10 மாதம் வலி விடாது.**

அன்பர் - அது என்ன தத்துவம்?

நண்பர் - You are a light person. It is a serious work. நீங்கள் கலகலப்பான சுபாவம் உள்ளவர். இந்த பாரம் தாங்காது.

அன்பர் - அன்னையிடம் எதையும் பெறலாம் எனக் கேள்விப்பட்டிருக்கிறேனே.

நண்பர் - பெறலாம், முயற்சி வேண்டும், மனக்கட்டுப்பாடு வேண்டும்.

அன்பர் - இந்த மானேஜர் வேலையை நான் ஏற்றுக் கொள்ள முடிவு செய்கிறேன். கூடிவர யோசனை சொல்லவும்.

நண்பர் - கடைக்கு, கல்யாணத்திற்கு அவசியமானால் மட்டும் போகவேண்டும். கடமையை மட்டும் செய்யவேண்டும். கலகலப்பாக மலரக்கூடாது. இதை ஏற்றுக் கொண்டாலே தலை சுற்றும்.

அன்பர் - தலை சுற்றாமல், ஜுரம் வாராமல் இதை ஏற்க முடியாதா?

நண்பர் - அதற்கு அன்னை மீது அடுத்த கட்டத்தில் நம்பிக்கை வேண்டும்.

அன்பர் - எனக்குள்ளது எல்லாம் நம்பிக்கையில்லையா?

நண்பர் - இன்றுள்ள சுபாவத்திற்குரிய நம்பிக்கையிருக்கிறது. அதிக நம்பிக்கை வேண்டும்.

அன்பர் - நம்பிக்கை என்றால் என்ன?

நண்பர் - அன்னையை நம்பி பெரிய காரியத்தை ஏற்றால் மனமும், உடலும் சந்தோஷப்படுவது நம்பிக்கை. வலியும், ஜுரமும் வந்தால் அது நம்பிக்கையில்லை.

அன்பர் - நான் ஜெனரல் மானேஜர் பதவியை ஏற்க முடிவு செய்து விட்டேன்.

அன்பருக்கு கம்பனி, உத்தியோகம், லீவு, வீடு மாற்றம், ஊர் மாற்றம் என்று புது வேலை சம்பந்தமான அத்தனையும் சுமுகமாகத் தொடர்ந்து கூடிவருகிறது. தலைவலி, உடல் முழுவதும் வலி, டாக்டர் உடம்பில் ஒன்றும் குறையில்லை என்கிறார். மாத்திரைக்கு வலி கட்டுப்படவில்லை. மாதம் 1½ ஆயிற்று. வலி தாங்கவில்லை. மீண்டும் அவர்கள் சந்தித்துப் பேசுகின்றனர்.

அன்பர் - வலி சிரமம் அதிகம்.

நண்பர் - கொஞ்ச நாளானால் சரியாகிவிடும்.

அன்பர் - எத்தனை நாள்?

நண்பர் - தானே சரியாவது 10 அல்லது 20 நாளிலும் நடக்கும், 5 அல்லது 6 வருஷத்திலும் நடக்கும்.

அன்பர் - நாளானால் உயிரிருக்காது.

நண்பர் - பிரியப்பட்டுத் தெரிந்து ஏற்றுக் கொண்டதன்றோ!



அன்பர் - வலி போக வழி சொன்னால் பரவாயில்லை.

நண்பர் - இரண்டு வழி எனக்குத் தெரியும்.

1. வேலையைப் பொறுப்புடன், பிரியமாக, சந்தோஷமாக **மனதால்** ஏற்றுக் கொண்டால் உடனே வலி நின்று விடும்.
2. கம்பனி சம்பந்தமாகத் திருமணம் போன்ற கம்பனி விழாக்களை அடிக்கடி ஏற்படுத்தி, நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் வலி விழா ஆரம்பித்தவுடன் நின்று போகும்.

அன்பர் - புது வேலையில் பழைய வாழ்வு இரண்டாவது.

நண்பர் - முதல் முறை நேரானது, சிறந்தது. அடுத்தது இரண்டாம்பட்ச முறை. இரண்டில் எதுவும் வலியை நீக்கும். **உங்களால் முடியுமானால், இரண்டையும் செய்யலாம்.**

அன்பர் - வலி போக வழியிருக்கிறது என்று கேட்க சந்தோஷமாக இருக்கிறது. வலியே போய்விட்டது போன்ற உணர்வு எழுகிறது.

அன்பர் ஓரளவு திருப்தியாக வீடு திரும்பினார். அன்று நிம்மதியாகத் தூங்கினார். காலையில் எழுந்தவுடன் வலியே இல்லை. ஆச்சரியமாக நண்பரிடம் போனில் சொன்னர். வலி அதுபோல் உடனே போகாது என நண்பர் அறிவார். எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டார். அன்பர் கம்பனியில் போய் பொறுப்பாகச் செயல்பட நினைக்கும் பொழுதெல்லாம் வெறுப்பு வருவதைக் கண்டார். மனத்துடன் கொஞ்ச நாள் போராடி, நண்பருடன் கலந்து முடிவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அன்று மாலை வலியிருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அன்றே முதலாளி இவருக்கு டைரக்டர் பதவியும்,

பங்கும் கொடுப்பதாகச் சொன்னார். உடனே நண்பரிடம் வந்து கலந்து ஆலோசனை செய்தார்.

நண்பர் - நீங்கள் கம்பனியில் எடுத்த முயற்சி உங்கள் சொந்த முயற்சி. இவையெல்லாம் தொடர்ந்து நடக்க சட்டங்களை ஏற்படுத்தி காரியங்கள் தானே நடந்தால், உங்கள் முயற்சி இந்த அளவில் பலித்துப் பலன் கொடுத்துவிட்டது எனப் பொருள். டைரக்டர் பதவி, பங்கு அதன்பிறகு பெற்றால் பலிக்கும், நீடிக்கும்.

அன்பர் - முதலாளிகள் சம்பளம் தருவார்கள். பங்கு தரமாட்டார்கள். அவர்கள் கொடுக்கும் நேரம் வாங்கிக் கொள்ளாவிட்டால், மனம் மாறிவிடுவார்கள். இரண்டு மூன்று மாதம் சம்பளத்திற்கே நல்ல வேலை செய்தால், முதலாளி இதுவே சௌகரியம் என விட்டு விடுவார். பிறகு டைரக்டர் பதவியை மறந்துவிடுவார்.

நண்பர் - நீங்கள் சொல்வதுதான் உண்மை. அது திறமை மிகுந்த மானேஜருக்கு. இந்த மானேஜர் பதவியில் வெற்றி காண்பதற்கே வலி வந்து மனமாற்றத்தால் போயிருக்கிறது. உங்களுக்கு இந்த சட்டம் உண்மையில்லை.

அன்பர் - எனக்குரிய சட்டம் எது?

நண்பர் - பொறுப்பை நாளுக்கு நாள் அதிகமாக ஏற்றுக் கொண்டு மனத்துள் பாரம் கரைந்து லேசாகி சந்தோஷம் வருவது உங்களுக்குரிய சட்டம். **அந்த சந்தோஷம் வந்தால், டைரக்டர் பதவி தானே தேடி வரும்.** உலகத்துச் சட்டம் உங்களுக்கில்லை.

வேலை நடக்க வேண்டும்.



மனம் விரும்பி பொறுப்பை ஏற்க வேண்டும்.

ஏற்றபின் அது பாரமாக இல்லாமல் லேசாக இருக்க வேண்டும்.

லேசான மனம் சந்தோஷப்பட வேண்டும்.

அன்பர் - நீங்கள் சொல்வதெல்லாம் எனக்கு சரி எனப்பட்டாலும் உடனே டைரக்டர் பதவியை ஏற்பது முறை, நாள் தள்ளக் கூடாது என நான் நினைக்கிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

நண்பர் - எனக்கு என்று எந்த அபிப்பிராயமும் கிடையாது. என் அனுபவத்தைக் கூறினேன். உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்.

அன்பர் ஆபீசிலிருந்து அன்பருக்கு போன் வந்து ஒரு முக்கிய பைல் தொலைந்து போய்விட்டதால் இருவர் சண்டையிடுகிறார்கள் என்று செய்தி வந்தது. அதுவே அன்பர் முடிவு சரியில்லை எனக் காட்டுகிறது என்று அன்பர் அறியவில்லை. அவசரமாக அவர் ஆபீசுக்கு போய்விட்டார்.

10 நாள் கழித்து வந்த அன்பர் கவலையோடு பேசினார். தாம் பழைய வேலையை விட்டு இங்கு வந்ததே தவறு என்றார். பழைய வேலையில் எல்லாம் அவருக்கு பழக்கமானது. தவறு வர வழியில்லை. நிலையானது. ஆட்டம் காண எதுவுமில்லை. இது புது இடம். முதலாளி எந்த நேரம் என்ன சொல்வார் என்று தெரியவில்லை. மனம் கலங்கியிருந்தார்.

அன்பர் - அன்பர் நாம் பேசியதிலிருந்து 10 நாளாகச் சரியாக இல்லை.

நண்பர் - **மனம் ஒரு நிலையாக இருந்தால் எதுவும் சரியாக இருக்கும்.**

அன்பர் - மனம் ஒரு நிலையிலில்லை. அது சரி, அன்று நீங்கள் டைரக்டர் பதவியைப் பற்றிக் கூறியதை மீண்டும் ஒரு முறை சொல்வீர்களா?

நண்பர் மறுமுறை விளக்கம் கூறினார். நண்பர், விளக்கமாகக் கூறினாலும் அன்பர் இதுபோன்ற நேரம் அனைவரும் எழுப்பும் எல்லாக் கேள்விகளையும் எழுப்பினார். ஒருவாறு சமாதானமடைந்தார்.

அன்பர் - நான் வீட்டுக்குப் போய் சில நாள் யோசனை செய்து நீங்கள் சொன்னபடியே நடக்க முடிவு செய்து மீண்டும் வருகிறேன்.

அப்படிச் சொல்லிவிட்டு வீட்டிற்குப் போனவர் சற்று நேரம் கழித்து வந்தார். முதலாளி அவரைப் போனில் கூப்பிட்டு, "டைரக்டர் பதவியையும், பங்குகளையும் நான் உங்களை ஏற்கச் சொன்னேன். அடுத்த போர்ட் மீட்டிங் 3 மாதம் கழித்து வருகிறது. உங்கள் முடிவுக்கு அவசரமில்லை. அடுத்த மீட்டிங்கிற்குள் சொன்னால் போதும். தற்சமயம் உள்ள வேலையைக் கவனிப்போம்" என்று கூறியதாக, சந்தோஷமாகச் சொன்னார்.

அன்பர் - அது எப்படி நடந்தது?

நண்பர் - முடிவு என்பது வலுவானது. வாயால் பேசுவது சொல். அபிப்பிராயம் சொல்லை ஏற்றுப் பேசுவது. **முடிவு என்பது மனம் பொறுப்பை ஏற்று அதன் பின் பேசுவது. அதனால் முடிவுக்கு உடனே பலன் உண்டு.**

அன்பர் - இனிக் கவலையில்லை.

நண்பர் - கவலையில்லை என்பது சரி. ஆனால் காரியம் முடிந்துவிட்டது என்பதால் மனம் பொறுப்பை இழப்பதுண்டு. பொறுப்பை ஏற்றால், ஏற்றதை மனம்



நிறைவேற்ற முடிவு செய்தது நிரந்தரமானால் கவலையில்லை.

அன்பர் - எந்த நேரமும் நித்ய கண்டம் பூரண ஆயுசு என்பதுதான் நிலையா?

நண்பர் - வாழ்வு அடிப்படையான எல்லா விஷயங்களிலும் அப்படித் தானே, இது மட்டுமா? சுதந்திரம் வந்து 55 ஆண்டாக சர்க்கார் நிலையாகத்தானே இருக்கிறது. 5 ஆண்டுக்கு ஒரு முறை கண்டம் வந்து தானே போகிறது. எது அப்படியில்லை?

அன்பர் - தத்துவமெல்லாம் சரி. இனி ரிடையர் ஆகும்வரை எந்தப் பிரச்சினையும் வாராமலிருக்க வழியுண்டா?

நண்பர் - உண்டு.

அன்பர் - என்ன அது?

நண்பர் - பழைய பர்சனாலிட்டி போய் புது பர்சனாலிட்டி வந்தது நிலையானால் இனி பிரச்சினையே வாராது.

அன்பர் - அல்ப ஆசை கூடாதா?

நண்பர் - அதுவே பொருத்தமான சொல்.

அன்பர் - உத்தியோகத்திற்குத் தகுந்த மனநிலை, பழக்கம் வேண்டும் என்று கூறலாமா?

நண்பர் - அது இருந்தால் ஆட்டம் காணாது.

✯ ✯ ✯

## சரணாகதி சமாதியைக் கடந்தது

*(நவம்பர் 2002 இதழின் தொடர்ச்சி....)*

*(ஆகஸ்ட் 15, 2002 அன்று இராணிப்பேட்டை தியான மையத்தில் திருமதி வசந்தா லஷ்மிநாராயணன் நிகழ்த்திய உரை)*

ஓர் office-இல் பல குமாஸ்தாக்கள் இருப்பார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தைக் கவனிப்பார்கள். சில officer-கள் இருப்பார்கள். ஒவ்வொருவரிடமும் சில விஷயங்கள் இருக்கும். தலைமை officer-இடம் எல்லா விஷயங்களும் இருக்கும். யோகத்தைப் பொறுத்தவரையில் கர்மம், கடமை, பக்தி, தியானம், ஆசனம், பிராணாயாமம், நியம நிஷ்டை, மந்திரம், லயம், தந்திரம் என்று பல்வேறு முறைகள் உள்ளன. மேற்கூறிய தத்துவங்கள் பல இம்முறைகளில் வெளிப்படும்.

எல்லாத் தத்துவங்களும் எந்த முறையிலும் வெளிப்படாது. சரணாகதியில் எல்லாத் தத்துவங்களும் வெளிப்படும். எந்தெந்த முறையில் சரணாகதி எந்த அளவு வெளிப்படுகிறது என்று தெரிவதும், எந்தத் தத்துவங்கள் எந்த அளவு வெளிப்படுகின்றன என்று தெரிவதும், சரணாகதியில் எப்படி எல்லாத் தத்துவங்களும் முழுமையாக வெளிப்படுகின்றன என்று தெரிவதும் சரணாகதியை முழுமையாக அறிந்துகொள்ள உதவும். சரணாகதி வாழ்வில் எங்கும் காணப்படுகிறது. ஆனால் எங்கும் முழுமையாக இல்லை. உடல் வேலையை எடுத்து இயல்பாகச் செய்வது சரணாகதியாகும்.

சமூகமோ தன்னை அறியாதது, மனிதன் சமூகத்தில் தன்னை அறியாமல் கிரகிக்கப்படுகிறான். வேறு ஜாதியில் பெண்ணை எடுக்க விரும்புபவன் ஆர்வமாகத் திட்டம் தீட்டி அவர்களுடன் கலந்து எல்லாவற்றையும் முடிவு செய்த பிறகு அவர் குடும்பத்தார் மறுத்தால் பொருட்படுத்தாமல் மேலே போக முயல்கிறான். இவன் குடும்பத்தார்



கூறுவதையும் பொருட்படுத்தாமல் இருக்கிறான். இன்று உலகம் இதை எதிர்ப்பதில்லை. அன்று நிலைமை வேறு. வேறு ஜாதியில் திருமணம் செய்துகொள்பவனை உலகம் ஒழித்துக்கட்டும் நிலையில் இருந்தது. உற்றார் உறவினரைப் பொருட்படுத்தாதவனுக்கு அவன் கம்பெனி முதலாளி கோபப்படுவதாக அறிந்தவுடன் ஆட்டம் காண்கிறது. வேலை போனவுடன் ஆர்வம் போகிறது. வீட்டைவிட்டுக் காலி செய் என்றவுடன் வேறு வீடு கிடைக்காது என்று தெரிகிறது. எந்தக் கடைக்குப் போனாலும் எவரும் உள்ளே அனுமதிக்க மறுக்கின்றனர். சமூகம் சக்தி வாய்ந்தது என்று அறிகிறான். சமூகத்தை எதிர்க்கும் எண்ணத்தைக் கைவிடுகிறான். திருமணம் மறந்துபோகிறது. கொஞ்ச நாள் கழித்து எதைச் செய்வதாய் இருந்தாலும் முதலில் இதை உலகம் ஏற்குமா? என்று நினைக்கிறான். உலகம் ஏற்பதை மட்டும் செய்யக் கற்றுக்கொள்கிறான். இது மனிதன் சமூகத்திற்குச் செய்யும் சரணாகதியாகும். சமூகத்திற்கும், மனிதனுக்கும் உள்ள தொடர்பு பல ஆயிரம் உதாரணங்கள் மூலம் கூறலாம். ஒவ்வொன்றிலும் சரணாகதி எந்த அளவில் கலந்து இருக்கிறது என்று கூறலாம். இது சமூகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சரணாகதி. பயத்தால் ஏற்படும் சரணாகதி (negative surrender) எனப்படும். (positive surrender) என்பது அன்பால் செய்யப்படுவது. அன்பால் அந்தரங்க ஆத்மா மலர்ந்து ஆண்டவனுடன் ஐக்கியமாவது சரணாகதி. ஆண்டவனுக்குச் செய்யும் சரணாகதியைவிட அன்பருக்குச் செய்யும் சரணாகதி பெரியது. பெரியவர்களிடம் மரியாதையாக இருப்பது சுலபம். சிறியவர்களிடம் அதே அளவு மரியாதையாக இருப்பது சிரமம். அதுபோல் மனிதனுக்குச் செய்யும் சரணாகதி திருவுருமாற்றத்தால் செய்யக்கூடியது. தவத்தால் ஆண்டவனுக்குச் சரணடையலாம். மற்ற மனிதர்களுக்குச் சரணாகதி செய்ய தவம் போதாது. சரணாகதி ஆண்டவனுக்கும், மனிதனுக்கும் மட்டும் உரியதன்று. காலத்திற்கும், இடத்திற்கும், பொருட்களுக்கும், அசைவிற்கும், அன்பிற்கும், அழகிற்கும் சரணாகதி தேவை. கடைசிக் கட்டமான மிகச் சிறிய

அணு போன்ற அசைவிற்கும் சரணாகதி பலித்தால் சரணாகதி பூர்த்தியானதாக அர்த்தம். உதாரணமாக, சரணாகதி ஒருவருக்குப் பெரிய விஷயங்களில் பலித்தது என்று கூறுவோம். அவர் மனதில் ஒரு சிறு எண்ணம் தோன்றுகிறது. அது மனத்தைக் கடந்து காத தூரத்தில் இருப்பதாகத் தெரிகிறது. பழைய நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதுவது பற்றிய எண்ணம் அது. அதை அவர் பொருட்படுத்துவதில்லை என்றால் அலட்சியப்படுத்துவதாக அர்த்தம். எழுதலாமா, வேண்டாமா? என்று நினைத்தால் சிந்திப்பதாக அர்த்தம். சிந்தனைக்குப் பதிலாக அந்தச் சிறிய எண்ணத்தை அவரால் சரணாகதி செய்ய முடியுமானால் எண்ணம் கரைந்து மறைந்து அகம் மலர்ந்து ஆத்மா எழுந்து அன்னை முன் நின்று ஆசீர்வாதம் பெற்றபின் கிடைத்த அன்னை தரிசனமே அகத்தில் இன்று கிடைக்கும். ஆத்ம சமர்ப்பணம் அன்னை தரிசனம். பரமாத்மாவின் அந்தரங்க அழைப்பு சரணாகதியைச் சேர்ந்தது. பிரம்மம் வாழ்வில் தன்னை இழந்து தேடிக் கண்டுபிடித்து ஆனந்தம் பெற முயல்வதற்கு மனிதன் இறைவனுக்கு விரும்பிச் சரணடைவது உதவும்.

### *சரணாகதியின் பல்வேறு நிலைகள் :*

மனத்தில் எண்ணமாகவும், உயிரில் உணர்வாகவும், உடலில் செயலாகவும் மனிதன் இருக்கின்றான். நாம் மனிதன் என்று கூறுவது எண்ணம், உணர்வு, செயலாகும். சரணாகதி பூர்த்தியாக மனம், உயிர், உடல், சரணடையவேண்டும். ஆத்மாவும் சரணடையவேண்டும். நம் கரணங்கள் சரணடையுமுன் அவற்றின் செயல்கள் சரணடையவேண்டும். கரணங்களின் செயல்கள் கரணங்களிலும் அவற்றின் சூட்சுமப் பகுதிகளிலும் இருக்கின்றன. ஒருவரை வேலைக்கு வைத்துக்கொள்ள அவனுடைய சர்ட்டிபிகேட்டுகளைச் சோதனை செய்கிறோம். ஒருவனுக்கு நாம் பெண்ணைக் கொடுக்க அவனுடைய பெற்றோர்களைச் சந்தித்துப்



பேசுகிறோம். அவன் படிப்பைப் பற்றியும், குணத்தைப் பற்றியும் தெரிந்துகொள்கிறோம். ஜாதகத்தைப் பார்க்கிறோம். அவற்றுடன் நிற்பது இல்லை. யாரை வேலைக்கு அமர்த்தவேண்டுமோ அவர் ஏற்கனவே வேலை செய்த இடங்களில் விசாரிக்கிறோம். அவனை அறிந்தவர்களைக் கலந்து பேசுகிறோம். வரனை முடிப்பதற்கு முன் அவன் வாழ்ந்த இடங்களில் விசாரிக்கிறோம். விண்ணப்பதாரரின் சர்ட்டிபிகேட்டுடன் அவன் வாழ்வு முடிவதில்லை. தாயார், தகப்பனார் சொல்வதுடன் வரனைப் பற்றி நாம் திருப்திப்படுவதில்லை. இதைக் கடந்த சூட்சும லோகம் உண்டு. அதுவும் சரி என்றால்தான் வேலை கொடுப்போம், சம்பந்தம் செய்வோம். அதுபோல் கரணங்களில் சூட்சுமப் பகுதி சரண் அடைந்தால்தான் கரணங்களுடைய சரணாகதி பூர்த்தியடையும்.

எண்ணம் என்பது மனத்தின் செயல். சூட்சும மனத்தில் எண்ணம் என்பது எண்ணமாக இருக்காது. அப்படி ஒன்று இருப்பதாகத் தெரியும். அது எண்ணம்போல் விபரமாக இருக்காது. ஆனால் அது மனத்துள் நுழைந்து எண்ணத்தைக் கிளப்பும். இதை உந்துதல் என்று சொல்லலாம் (impulse). அதேபோல் உயிரிலும், உடலிலும் சூட்சுமம் செயல்படும். நாம் ஒருவருடன் பேசிக்கொண்டு இருக்கும்பொழுது பதில் சொல்ல ஒன்றும் இல்லாவிட்டாலும், பதில் சொல்ல வேண்டாம் என்று முடிவு செய்து இருந்தாலும் சில சமயங்களில் ஆம் நானும் அப்படித்தான் நினைத்தேன் என்று கூறுகிறோம். பேசியபின் இது நாம் பேசியதில்லை என்று தெரிகிறது. கவனித்துப் பார்த்தால் மீண்டும் அதேபோல் பேச, சொல் எழுகிறது. நாமே நினைத்துப் பேசுவது மனத்தின் எண்ணம். நம்மையறியாமல் பேச்சு எழுவது சூட்சும எண்ணம். எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்தபின் சூட்சும எண்ணத்தையும் சமர்ப்பணம் செய்யவேண்டும். எண்ணம் எழுவது தெரிவதால் சமர்ப்பணம் செய்ய முடியும். சூட்சும எண்ணம் எழுவது நமக்குத் தெரியாது. அதைச் சமர்ப்பணம் செய்ய

அதிக விழிப்புடன் இருக்கவேண்டும். அந்த விழிப்பு யோகத்திற்கு அவசியம். மனத்தின் எண்ணம் உயிரின் வேகமாக உடலில் அசைவாக எழும். சூட்சும உடல், சூட்சும உயிர், சூட்சும மனசு எண்ணம் முன் கூட்டி எழுபவை உந்துதல் ஆகும் (impulse). எண்ணம் உலகத்திற்குரியது. வெளியிலிருந்து உள்ளே நுழைகின்றன. நமக்கு உடல், உயிர், மனம் இருப்பதுபோல் பிரபஞ்சத்திலும் உடல், உயிர், மனம் இருக்கிறது. எண்ணம் உடலிலிருந்து மனத்திற்கு வருவதாக பகவான் கூறுகிறார். பிரபஞ்சம் சூட்சுமமானது. எண்ணம் என்பது உடல் அசைவு மனத்தில் வெளிப்படுவதாகும். பிரபஞ்சத்தின் உடலில் ஏற்படும் அசைவுகள் எண்ணமாக மாறி நம்முள் நுழைகின்றன. முதலில் நம் சூட்சும உடலில் நுழைந்து பிறகு ஸ்தூல உடலுக்கு வந்து மேலெழுந்து மனத்திற்கு வருகிறது. சமூகச் செய்திகள் நம் வீட்டிற்கு வருவதுபோல் பிரபஞ்சத்தின் செய்திகள் நம்மை வந்து அடைகின்றன. சரணாகதி எண்ணம் நுழையும் இடத்தில் ஆரம்பிக்கவேண்டும். உள்ளுணர்வின் உந்தல்கள் பிரபஞ்சத்தின் உந்தலுடன் சந்திக்கும் இடத்தில் அகமும், புறமும் உண்டாகும். அவை எல்லா சூட்சும லோகங்களிலும் பூர்த்தியாகி உந்தல் எழாவிட்டால் மேல் மனத்திற்கு வாராவிட்டால் சரணாகதி பூர்த்தியாகும். இன்றுள்ள இடத்திலிருந்து இலட்சியத்தை அடையும்வரை யாத்திரை மனித முயற்சி. அது மனிதத் திறமையின் முயற்சி. முயற்சியும், திறமையும் சரணாகதியால் அன்னையை அடைவது அருள் பேரருளாவது ஆகும்.

### *சரணாகதியின் சாதனை :*

நாம் தேடாததைச் சாதிப்பதில்லை. நாம் அறியாததையும் அடைவதில்லை. தெரிவது சாதனைக்குதவாது; தடையாகும். தேடுவது எதிர்ப்பாகும். சாதனைக்குத் தடை வரும். இது ஒரு முரண்பாடான வாதம். இதனுள் சரணாகதியின் சூட்சுமம் உள்ளது. எந்தச் சாதனைக்கும் முயற்சி வேண்டும். முயற்சி அதிகமாக



இருந்தால் சாதனை பெரியதாக இருக்கும். முயற்சியே இல்லாதவனுக்கு எதுவுமில்லை. ஒருவர் முழு முயற்சி எடுக்கக் கூடிய திறமை உள்ளவர். அந்த முயற்சி முழுமையாகப் பூர்த்தியாகும். அது உரிய காலத்தில் பூர்த்தியாகும். அப்படிப்பட்ட ஒருவர் முயற்சி எடுப்பதற்குப் பதிலாக முயற்சி எடுக்கும் திறமையைச் சரணம் செய்தால் சாதனைக்குக் காலம் தேவையில்லை. உடனே நடக்கும். முதற்கட்டத்தில் முயற்சிக்குரிய பலன் உண்டு. இரண்டாம் கட்டத்தில் சரணாகதிக்குரிய பலனுண்டு. முயற்சிக்குரிய பலன் அருள். சரணாகதிக்குரிய பலன் அருள் பேரருளாய் காலம் தேவைப்படாமல் பூர்த்தியாவது. சாதனைக்குத் தேடுவதும், தெரிவதும் அவசியம். அவை இரண்டும் தடை. சாதனை என்பது தீவிரமான தெளிவான ஆர்வம். ஆனால் அது பற்றற்றது ஆகும். பிரம்மம் நாம் நாடுவதை நமக்கு உற்பத்தி செய்துவிட்டு அகலும். தான் குறையாமல் நமக்குத் தேவையான அனைத்தையும் தருவது பிரம்மத்தின் தன்மை. பிரம்மம் செய்வதைச் சரணாகதி செய்யும். அதனால்தான் பலன் அதிகம். பற்றற்று தீவிரமாக நாடுவது சரணாகதியின் நிபந்தனை. மனத்தின் எண்ணத்தில் ஆரம்பித்து ஆறு கட்டம் தாண்டி உடலின் சூட்சும உந்துதல்வரை சரணாகதிக்குரிய சட்டம் இதுவே. எண்ணம் (gross thought) முதல் உடலின் சூட்சும உந்துதல்வரை subtle physical impulse இந்த அளவுகோல் விரிந்து செயல்படும். இங்கெல்லாம் செயல்படுபவருக்கு இந்த விபரம் தெளிவாகத் தெரியும்.

தங்கையை phone-இல் கூப்பிடவேண்டும் என்பது எண்ணம் (gross thought). இந்த எண்ணம் மனதில் எழுகிறது, எழுந்தபின் சமர்ப்பணம் செய்யத் தோன்றுகிறது. எண்ணம் சமர்ப்பணம் ஆனபின் அது சொற்களெல்லாம் உணர்ச்சியாக மாறி எண்ணத்தைவிடச் சற்று வேகமாக உள்ளே இருக்கும். அதைச் சமர்ப்பணம் செய்வது கடினம். அதையும் சமர்ப்பணம் செய்தபின் மனமும், உணர்வும் அமைதியாவதைக் காண்போம். ஆனால் அந்த வேகம் மறைவது

இல்லை. கனத்து ஆழத்திற்குப் போவது தெரியும். அது உடலைச் சேர்ந்துவிட்டது. இதன் பிறகு அந்த எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்வது வாழ்க்கைக்குரியது என்பதைவிட யோகத்திற்குரியது எனலாம். இதுவும் சமர்ப்பணம் ஆனால் எண்ணம் சூட்சுமத் தேகத்திற்குப் போய்ச் சேரும். அங்கு மூன்று கட்டங்கள் உண்டு. சமர்ப்பணத்தைத் தொடர்ந்து செய்தால் எண்ணம் நம்மை விட்டுத் தூர விலகுவது தெரியும். முடிவான நிலையில் வெகு தூரத்தில் இருப்பதாக அறிவோம். இனி அந்த எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்ய இதுவரை செய்த முயற்சியின் அளவுக்குரிய முயற்சி தேவை. அதைச் செய்தால் உடல் லேசாகிவிடும். பிரச்சினை தீர்வதற்கு முதல் நிலை சமர்ப்பணம் போதும், இந்த முடிவான நிலையின் சமர்ப்பணம் யோகத்திற்குத் தேவை. மனித நிலையைக் கடந்து தெய்வ நிலையையும் கடந்து சத்திய ஜீவியத்திற்குப் போக இந்தச் சமர்ப்பணம் அவசியம். எதைச் சாதிக்கவேண்டுமோ அந்த எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்தால் சமர்ப்பணம் மேற்கூறிய எந்தக் கட்டத்திலும் பலிக்கும். எந்தக் கட்டத்திலும் பலிப்பது நின்றுவிடும். சமர்ப்பணம் உயர்ந்தால் சாதனை உயரும். முடிவான நிலை சமர்ப்பணம் பலித்தபின் அலைகடல்போல் பிரவாகமாக அமைதி உள்ளே நுழையும். அந்த அமைதிக்கு ஈடு இணையில்லை. அதே அமைதி நம்முள்ளே இருந்து மேலே எழவல்லது. அது அதைவிடப் பெரிய அமைதி. அதன்பின் சமர்ப்பணம் தேவையில்லை. சாதனை தானே முடிந்துவிடும்.

சமர்ப்பணம், சரணாகதி பலிக்காதவருக்கு முயற்சி மலை ஏறுவதுபோல். முதல் தடையைக் கடந்தவருக்குச் சமர்ப்பணமும், சரணாகதியும் தரும் வாய்ப்பு ஏராளம். இவைகள் பெருஞ்சாதனைகள். ஆனால் முடிவான யோகம் அதுவன்று. நாம் விரும்புவதை நாம் அறிவோம். அது உதாரணமாகப் பிறரைத் திருப்திப்படுத்துவதாக இருக்கலாம். நல்ல நேரம் மனம் தானே மலரும். எதுவானாலும் இவை சுபாவத்தின் வெளிப்பாடுகளாகும். சுபாவத்தின்



வெளிப்பாடுகளைச் சமர்ப்பணம் செய்ய முடிந்தால் அபிப்பிராயத்தைச் சமர்ப்பணம் செய்ய முடியும். தீர்மானத்தையும் சமர்ப்பணம் செய்ய முடியும். இவை இரண்டும் வாழ்க்கை வசதியை அபரிமிதமாக மாற்றும். யோக சித்தி உச்சகட்டமானால் வசதியான வாழ்வு தாழ்ந்தது. இடையிலுள்ள நிலை மனத்திற்குரியது. அது மனம் நிறைந்த வளமான வாழ்வு. இது அர்த்தபுஷ்டியானது, பெரியது. இந்தக் கட்டுரையில் நான் யோகத்தைப் பற்றிப் பேசவில்லை என்பதுபோல் வசதியான வாழ்க்கையைப் பற்றியும் பேசவில்லை. மனம், மன நிறைவு, மன வளம், மனம் பெறும் சந்தோஷம், அருளாக மேலிருந்து வரும். மகிழ்வு பேரருளாக உள்ளிருந்து பீறிட்டெழும் ஆனந்தம் ஆகியவை இச்சொற்பொழிவிற்குரியவை. சரணாகதி, சமர்ப்பணம் பலித்தவர்கள் உயர்ந்த மனவளத்தை நாடினால் சொற்பொழிவின் கருத்துகள் பயன்படும். சந்தோஷம் சமர்ப்பணமானால் பெரியவை நடக்கும். அது சுறுசுறுப்பு தரும் சந்தோஷமன்று (pleasure). பேரானந்தத்தின் பெருவெள்ளமான ஆன்மீக ஆனந்தமாகும் (felicity). இதுவே தாழ்ந்த கட்டத்தில் பலித்தால் குதூகலமாகும் (cheerfulness). அதற்கும் கீழே இந்தச் சமர்ப்பணம் வலியை ஆனந்தமாக்கக் கூடியது. கனவில் செய்யும் சமர்ப்பணம் கனவின் போக்கை மாற்றும். கதையைப் படிக்கும்போது நிகழ்ச்சிகளைச் சமர்ப்பணம் செய்தால் கதையின் போக்கு மாறும். சூட்சும லோகத்தில் காலத்தின் வேகம் நாம் அறிந்ததுபோல் இருக்காது. உதாரணமாக நாம் இரயில்வே ஸ்டேஷனுக்குப் போனபின் இரயில் ஒரு மணி நேரம் தாமதமாக வருவதாகச் செய்தி. நம்மால் அந்தச் செய்தியைச் சமர்ப்பணம் செய்ய முடியுமானால் இரயில் நேரத்தில் வரும். ஒரு மணி நேரம் தாமதமான இரயில் எப்படி நேரத்தில் வரும் என்பது ஒரு கேள்வி. அப்படி மாறக்கூடிய நிலைகள் அங்குண்டு. சமர்ப்பணம் அவற்றின் மூலமாகச் செயல்படும்.

*தொடரும்....*

☆ ☆ ☆

## Every night Mother spends some time in someone else.

**அன்னை இரவில் கொஞ்ச நேரம் ஒருவருடனிருக்கிறார்**

நமது தூக்கம் (conscious) தெளிவாக இருந்தால் அன்னை நம்மை நாடி வந்தது தெரியும். தத்ரூபமாக அன்னை நம் அருகிலிருந்தது தெரியாவிட்டால், கனவில் தெரியும், கனவிலும் தெரியாவிட்டால், அன்னை நினைவு வரும்.

**நமக்கு அன்னை நினைவு வந்தால், அன்னை நம்மை நினைக்கிறார்கள், நம்மிடம் வந்தார்கள் எனப் பொருள்.**

அன்னை உயிரோடிருக்கும்பொழுது இரவில் தாம் சந்தித்தவர்களைப் பற்றிப் பேசுவார். அவர்களிடமே கூறியுள்ளார். பலருக்கு அது தெரியும். அன்னை சொல்வதற்கு முன்பே அவர்கள் அன்னைக்கு எழுதுவார்கள். பலருக்குத் தெரிவதில்லை.

- அன்பர்களைப் பொருத்தவரை இன்று அன்னை பூதவுடலில் இல்லை என்பது பெரிய விஷயம். அதை ஈடு செய்யமுடியாது.
- ஆனால் உடலிலிருந்தபொழுது அன்னை செய்த எதுவும் இன்று நடக்காமலில்லை.

மகன் வெளிநாடு போயிருக்கிறான். பார்த்து 5 வருஷமாகிறது. பார்க்க முடியவில்லை என்பது சரி. இன்று போனில் அடிக்கடி பேசுவதாலும், e-mail அனுப்புவதாலும், கம்ப்யூட்டரில் காமிரா மூலம் உயிருடன் பார்ப்பதாலும்; 1940, 1950இல் இருந்ததைப் போலில்லாமல் நிலைமை மாறியுள்ளது. நேரடியாகப் பார்க்க முடியவில்லை என்ற ஒரு குறையைத் தவிர வேறு எந்தக் குறையுமில்லை என்பதுபோல்,



- அன்னை இன்று உயிரோடில்லை என்ற குறை தவிர அன்பர்கட்கு வேறெந்தக் குறையும் அன்னை வைக்கவில்லை.

50 ஆண்டுகட்கு முன்னிருந்ததைவிட இன்றைக்கு அன்னை மிகவும் சக்தி வாய்ந்திருப்பதால் 1950இல் அவரிடம் செய்த பிரார்த்தனைகள் இரண்டு நாளில் பலித்தால் இன்று இரண்டு மணி நேரத்தில் பலிக்கிறது. அன்று நேரே பெற்ற தரிசனம் இன்று தியானத்தில் கிடைக்கிறது.

இரவில் மட்டும் அன்று அன்னை சாதகர்களுடனிருந்தார். இன்று இரவும், பகலும் இருக்கிறார். அன்னை,

- சக்திவாய்ந்த தெய்வம் மட்டுமல்லர்.
- உயிருள்ள தெய்வம்.
- அழைப்புக்கு உடனே வரும் தெய்வம் என்பதை
- அழைத்தவர் அறிவார்.

❊ ❊ ❊

### ஸ்ரீ அரவிந்தம்

ஒருவருக்குக் கட்டுப்பாடாக அமைவது மற்றவர்க்கு எதிராக அமையும். பணத்தைச் செலவு செய்ய முன்வருவது செல்வனுக்குரிய கட்டுப்பாடு. பணத்தைச் செலவு செய்யாதது ஏழைக்குரிய கட்டுப்பாடு. ஏகபத்தினி விரதமும், கற்பும் கட்டுப்பாடாகவும் அமையும், எதிரானதாகவும் இருக்கும்.

*ஒருவரை அழிப்பது அடுத்தவரை உயர்த்தும்.*

## அபரிமிதமான செல்வம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

### முடிவில்லாத பணம் :

பணம் வருமுன் உபரி சக்திக்கு உபயோகமில்லை. பணம் வந்தபின் அது பயன்படுகிறது. தவணை முறை வந்தபின் எதிர்கால உழைப்பைப் பணமாக்கியது. கடன் கடந்த கால உழைப்பால் வந்த சொத்து பணமாகியது. பணம் கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும், நிகழ்காலத்திற்குள் கொண்டுவந்து வாழ்வை விரிவுபடுத்தியுள்ளது.

- அப்படிச் செய்ததில் மனிதத்திறன் (potentials of man) ஓரளவு வசதியாகியுள்ளது.
- நாமறியாத திறமைகள் ஏராளம்.
- அவற்றைப் பணமாக்கும் வழிகளும் ஏராளம்.
- இன்றுள்ள பணம்போல் அது ஆயிரம், லட்சம் மடங்கு.
- நாகரீகம் தன்னையறியாமல் அப்பணத்தை உற்பத்தி செய்துள்ளது.
- அறிந்து செய்தால் ஆயிரம் மடங்கு பணம் உற்பத்தியாகும்.
- கல்வி, பிரயாணம், மருந்து, விஞ்ஞானம், வசதி ஆகியவை அதுபோல் இன்று ஆயிரம் மடங்கு பெருகியுள்ளன. இனியும் ஏராளமாகப் பெருகும். பணமும் அந்தச் சட்டத்திற்குட்பட்டதாகும்.

### செலவுக்குப் பணம் வரும், சேமிப்புக்கு வாராது :

சேமிப்பு என்பது பழங்காலத்திற்குரியது. ஜாதி அழிய வேண்டும், மூடநம்பிக்கை அழியவேண்டும் என்பதில் எதிர்காலத்தில் சேமிப்பும் சேரும். சேமிப்பு அர்த்தமற்றதாகிவிட்டால், பணத்திற்கு என்ன செலவு? பணத்தை நல்ல முறையில் செலவு செய்ய மனிதன் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. பொருள்கள் விலை இறங்குவதால் பணம் உபரியாகும்.



### தானே பெருகும் பணம் :

இயற்கையில் பிராணிகளும், தாவரங்களும் பெருகுகின்றன. மனித குலம் தானே பெருகி வருகிறது. இது வேறு தலைப்பு. அதேபோல் சமூகத்தில் உற்பத்தியாகும் எந்த அம்சமும் - கல்வி, கலை, பொருள்கள் - தாமே பரவுகின்றன. பணமும் அதுபோல் பரவுகிறது. ஒரு கட்டத்தில் தாமே அவை பெருகுகின்றன (self-multiplying). பணம் கொஞ்ச நாட்களாக அந்நிலையை அடைந்துள்ளது.

இயற்கையிலும், சமூகத்திலும், ஆன்மீகத்திலும் இவ்வுண்மையைக் காண்கிறோம் (One becomes the many). இறைவன் சிருஷ்டியாவதால் குறைவதில்லை. பரமாத்மா, ஜீவாத்மாக்களை குறைவின்றி உற்பத்தி செய்கிறது. அதனால் பரமாத்மா குறைவதில்லை. குறையாத தன்மை (infinity) மனம், வாழ்வு, ஜடத்திற்குண்டு. எல்லாவற்றிற்கும் உண்டு என்பது தத்துவம். சக்திக்கும், ரூபத்திற்கும் முடிவில்லாமல் வளரும் குணம் உண்டு. பணம் அதற்கு விலக்கன்று.

**பணம் முடிவில்லாமல் வளரும் தன்மையுடையது.**

மனித வாழ்வு மற்றவற்றால் நிர்ணயிக்கப்படுகிறது. கண்மூடியுள்ளவரை சூழல் வாழ்வை நிர்ணயிக்கும். நாம் நம்மையறிந்தால் (conscious) நம் சூழலை நிர்ணயிக்கலாம். இன்று பணம் தானே பெருகுகிறது. நாம் கண்ணைத் திறந்தால் பணத்தை முடிவின்றிப் பெருக்கலாம்.

சமூகத்திற்கு உடல் உண்டு. ஜடமான பொருள்கள் - வீடு, ரோடு - சமூகத்தின் உடல். பணம் சமூகத்திற்கு உயிர். உடல் மந்தமானது, உயிர் வீர்யமானது. உடலும் பெருகும், மெதுவாகப் பெருகும். உயிர் வேகமாகப் பெருகும். பணம் வேகமாகப் பெருகும்.

வளர்ச்சிக்கு இரு நிலைகள் உள்ளன. (multiplication, self-multiplication) உணவால் வளர்வது வளர்ச்சி, உணர்வால் வளர்வது தானே பெருகுவது. தானே பெருகுவது உள்ளுணர்வின் தன்மையைப் பொருத்தது.

### சமூகத்தின் திறமை :

நாளுக்கு நாள் சமூகத்தின் திறமை அதிகரிக்கிறது. அதை மனிதனுக்கு சமூகம் கொடுக்கிறது. அதனால் சமூகம் மனிதனைக் கட்டுப்படுத்தியது. நாகரீகம் வளரும்பொழுது கட்டுப்பாடு தளர்ந்து, சுதந்திரம் வருகிறது. முன்னேறிய நாடுகளில் சுதந்திரம் அதிகம். தன்னிஷ்டப்படி வெளிநாடு போக, தான் விரும்பிய கடவுளை வணங்க, தான் இஷ்டப்பட்டதை கற்க, பல நாடுகளில் சுதந்திரம் உண்டு. பல நாடுகளில் இல்லை.

- *சமூகம் எந்தப் புதியதை ஏற்றாலும், மனிதனுக்கு அவ்வசதி வரும்.*
- *அது பணத்தைப் பெருக்கும்.*

உலகில் நாகரீகம் வளர்வதால் மனிதன் பெறும் வசதிகளும், சுதந்திரமும் பெருகுகின்றன. இவை தாமே நடப்பவை. அதற்குப் பதிலாக மனிதன் தன்னையறிந்து செயல்பட்டால், வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும். அந்தச் சட்டம் எல்லா அம்சங்களுக்கும் உண்டு.

- *நம் கருத்து பணம். பணம் பெருகக் கூடிய அளவில் சிறு அளவே பெருகியுள்ளது. முயன்றால் அளவுகடந்து பெருகும்.*

### சூட்சும ஞானம் தரும் பாதுகாப்பு :

வசதியும், இலாபமும், அதிகாரமும் ஏராளமாக உள்ள இடத்தில் ஆபத்து, ஏமாற்றுதல் ஏராளமாக இருக்கும். எந்தத் துறையில் இலாபம் இருந்தாலும் அதே துறையில் உள்ளவர்க்கே அது பயன்படும்.



மற்றவர்க்குப் பயன்படாது. ஏனெனில் அதே துறையில் உள்ளவர்க்குத்தான் அத்துறையின் சூட்சும ஞானமிருக்கும். சூட்சும ஞானமிருந்தால்தான் பாதுகாப்பிருக்கும். பொதுவாக இதை அனுபவம் என்போம்.

மேடைப் பேச்சிலிருந்து சமையல்வரை துறை தெரியாதவர் அதிக நாள் அங்கிருக்க முடியாது. மேடைப் பேச்சின் நுணுக்கமறியாதவர்களைக் கேலி செய்து அனுப்பிவிடுவார்கள். சமையலில் அஜாக்கிரதையாக இருந்தால் கை காலில் சூடு விழும், சமையல் வாராது. எல்லாத் துறைகளிலும் அனுபவம் உண்டு. அனுபவத்தின்மூலம் சூட்சும ஞானம் உண்டு. அதில்லாதவர்க்கு அத்துறை தன் பரிசைத் தாராது.

நாம் பணத்தை அபரிமிதமாக உற்பத்தி செய்யலாம் என்கிறோம். உற்பத்தி செய்வது திறமை. திறமை மட்டும் போதாது. பணத்திற்குச் சூட்சும ஞானமில்லாவிட்டால் அது பாதியில் தோற்கும். அது முழுவதும் பலித்த பிறகு தொந்தரவாக முடியும். பொதுவாக சூட்சும ஞானம் என்பதையும், பணத்தில் அது என்ன என்பதையும் அறிவது அவசியம்.

எந்த வேலையையும் சொல்லிக் கொடுக்கலாம், காட்டிக் கொடுக்கலாம், பயிற்சி அளிக்கலாம். சொல்லையும் பயிற்சியையும் கடந்து நாமே கற்றுக்கொள்ளக்கூடியன எல்லா வேலைகளிலும் உண்டு. அவற்றை சூட்சுமம், ரகஸ்யம் என்கிறோம். அரசியலில் திறமை, நிர்வாகம், தலைமை என்பவற்றைக் கடந்து பிரபலம் என்பது இப்படிப்பட்டது. எழுத்தாளருக்கு நடை, சமையலில் பதம், சங்கீதத்தில் பிரபலம் போன்றவை சூட்சுமத்தைச் சேர்ந்தன.

- *சூட்சும ஞானமில்லாவிட்டால் பலிக்காது.*
- *சூட்சும ஞானமிருந்தால்தான் பலித்தாலும் பாதுகாப்பிருக்கும்.*

பொதுமக்கள் இதை இராசி என்பார்கள். இராசி என்பது சூட்சுமத்தின் பகுதி. இதைப் பலவகைகளாகக் கூறலாம்.

- *நம் நிலைக்கு மேம்பட்ட ஞானம்.*
- *நம் சூட்சும நிலைக்குரிய ஞானம்.*
- *அனுபவ ஞானம்.*
- *பகுதியை அறியும் முழுமையின் ஞானம்.*
- *சாரத்தை அறியும் ஞானம்.*
- *உணர்ந்து அறியக்கூடிய ஞானம் என விவரிக்கலாம்.*

ஏராளமாக விவரம் தெரிந்தால் அதன் மூலம் இதைப் பெறமுடியும். பணம் முதலில் பொருளாக இருந்தது. பிறகு வேலையாயிற்று. முடிவாகப் பண்பாயிற்று. இவை ஒவ்வொன்றிற்கும் சூட்சுமப் பகுதிகள் உண்டு. அவற்றை எல்லாம் அறியவேண்டும்.

*தொடரும்....*

★ ★ ★

### ஸ்ரீ அரவிந்தம்

எதுவும் முடியாதபொழுது நம்பிக்கையை நாடுகிறோம். எல்லாம் முடியும் என்றபொழுது நம்பிக்கையை நாடும் ஆன்மா, உயர்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. அத்துடன் அன்னையின் உறவை அனுபவிக்கிறது. இனி வரும் எச்செயலும் அன்னையிடம் நெருங்கிவரும் சந்தர்ப்பமாக அறிகிறது.

***எதுவும் முடியாதபொழுது அழைத்த அன்னையை எல்லாம் முடியும்பொழுது அழைப்பது அன்னையை நெருங்குவதாகும்.***



## அன்பர் கடிதம்

அன்னைக்கு,

அன்னையின் குழந்தை எழுதுவது. நான் (II yr B.C.A.) சென்னையில் உள்ள (Jain College) விடுதியில் தங்கி படிக்கின்றேன். என் சொந்த ஊர் திருத்தணி.

இக்கடிதம் எழுதக் காரணம், என்னுள் எழும் பல கேள்விகளுக்கு விடை காண. நான் அன்னையை ஏற்றுக் கொண்ட இந்த 8 ஆண்டுகளில் என் வாழ்க்கையில் எவ்வளவோ மாற்றங்கள். என் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் அன்னை என்னுடன் இருப்பதை உணர முடிகிறது. எனக்கு எப்பொழுதும் கோபமோ, மகிழ்ச்சியோ அன்னையிடம் பகிர்ந்து கொள்வது (பேசுவது) வழக்கம். (எ.கா.) ஒரு முறை விடுதியில் காலை 5.30 a.m. எழுந்து வீட்டிற்கு phone பண்ண வேண்டும் என்று நினைத்தேன். அதேபோல் காலையில் எழுந்து வெளியில் வந்தேன், அது பனிக்காலம் என்பதால் அவ்வளவாக வெளிச்சம் இல்லை. வெளியில் வந்த உடன் இந்த நேரத்தில் போக வேண்டுமா என்று நினைத்தேன். உடனே என் தோள் மீது கைவைத்து நான்தான் உன் கூடவே இருக்கிறேனே, வா போகலாம் என்றார். நானும் அன்னையிடம் பேசிக்கொண்டே phone boothக்கு வந்தோம். அங்கு இருக்கும் இருக்கையைப் பார்த்து இங்கே அமருங்கள் Mother, 5 நிமிடங்களில் வந்து விடுகிறேன் என்று கூறிவிட்டு போய் phoneஐக் கையில் எடுத்த பிறகுதான் யோசித்துப் பார்த்தேன். அன்னையுடனா பேசிக்கொண்டு வந்தேன் என்று அவரை அமரச் சொன்ன seatஐப் பார்த்து Thank you so much Mother என்று கூறி முடிப்பதற்குள் Mother உடைய blessing

song Vijai T.V.யில் ஒளிபரப்பாகியது. ஒரு நிமிடம் அப்படியே உரைந்துவிட்டேன்.

இதைப்போல் பல விஷயங்கள் என் வாழ்க்கையில் சர்வ சாதாரணமாக நடப்பதுபோல் ஆயிற்று. எனக்கு வரும் கஷ்டங்களும், மகிழ்ச்சியும் அன்னைதான் கொடுக்கிறார். நான் விரும்பிய ஒன்று நடக்கவில்லை என்று கூறி வருந்தினால் அடுத்த நிமிடமே அந்நிகழ்ச்சி நடந்தால் எவ்வளவு துன்பங்கள் வந்திருக்கும் என்று தெரியப்படுத்துகிறார். இதுபோல் என் வாழ்க்கையில் நான் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியையும் என் அன்னையின் பார்வையில்தான் நடக்கிறது. அதைத்தான் நான் விரும்புகிறேன். என்னுடைய வேண்டுகோளே நான் அன்னை மீது வைத்திருக்கும் நம்பிக்கையில் ஒரு சிறு அளவு கூட குறையக்கூடாது என்பதுதான்.

✮ ✮ ✮

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சிந்தித்தால் நான் எண்ணமாவேன். சிந்தனையை நிறுத்தினால் மௌனம் வரும். தொடர்ந்தால் சைத்திய புருஷனை அடையலாம். அதுவே எண்ணத்தைச் சரண் செய்ய முடியும். எனவே மனிதன் சிந்தனையை நிறுத்தவேண்டும்.

*சிந்தனையை நிறுத்தி ஆத்மாவைக் காணவேண்டும்.*



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

அண்ணன் - ஒரு கண்ணாடிக்கு முன்னால் 15 பொருள்களிருந்தால் கண்ணாடி 15 பொருள்களையும் பிரதிபலிப்பதுபோல் செயல் சூழ்நிலையைப் பூரணமாகப் பிரதிபலிக்கும். நமக்குச் சில விஷயங்கள் மட்டும் தெரிகின்றன. வைத்தியர் நாடி பார்க்க கையைப் பிடிக்கிறார். அதனால் நாடி மணிக்கட்டில் மட்டும் இருக்கிறது எனப் பொருளில்லை. உடலெங்கும் நாடித் துடிப்புண்டு. இல்லாத இடமில்லை, மணிகட்டில் நாடி தெளிவாகத் தெரியும்.

தம்பி - பெற்றோர் குழந்தையைப் பூரணமாகக் கவனித்து ஒரு monograph ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதினால் நமக்கு அதிகம் புரியுமா?

அண்ணன் - மிகவும் உதவும். பொதுவாகக் குழந்தையைக் கவனிக்க - இந்தக் கண்ணோட்டத்தில் - பெற்றோர் பயிலவில்லை. ஆனால் அது மிகவுதவியாக இருக்கும். குழந்தையைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். எதையும் மறைக்கக் கூடாது. சொல்லக் கூச்சப்படக் கூடாது. சிறு வயதிலிருந்து குழந்தையைத் தாய் அறிவார். அதுபோல் நினைவு கூர்ந்து எழுதுவது மிகவுதவும். இது போன்ற ரிப்போர்ட் ஆங்கிலத்தில் எழுதினால் நல்லது. நம் நாட்டு வழக்கங்களைத் தமிழில் எழுதுவது பயன்படும்.

தம்பி - கருவான விஷயம் சமர்ப்பணம், அன்னையை அறிதல்.

அண்ணன் - எந்த விஷயமும் பெரியது (infinite). நாம் செயல்படும் பொழுது அதன் பெரிய அம்சத்துடன் தொடர்பு கொள்வதில் இரகஸ்யமிருக்கிறது. அன்னை எழுதியவற்றை அடிக்கடிப் பார்க்க வேண்டும். குழந்தை சண்டி செய்தால் அன்னை சண்டித்தனத்தைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்று எல்லா 18 வால்யூம்களிலும் பார்க்க வேண்டும். அதற்கெதிரான சொல் நிதானத்தையும் பார்க்க வேண்டும். தொடர்புள்ள சொற்கள் எரிச்சல், கவலை போன்ற எல்லாச் சொற்களையும் பார்க்க வேண்டும்.

பெரிய சாதனைகளானாலும், பெரிய வாய்ப்புகளானாலும், எதிர்காலத்தை முழுவதும் மாற்றியமைத்த திருப்பங்களானாலும், அன்பர்கட்கு அது நடப்பது, முடிவு எடுப்பது - உருவாவது என்பது 1 மணி அல்லது 2 மணி நேரத்தில் என்பதைக் கவனிப்பதில்லை.

தம்பி - செயலை (act) ராசி, அம்சம், குணம் என விவரமாக அறிந்தால் மேற்சொன்னதை அறிய உதவுமா?

அண்ணன் - அது சரி. நான் சொல்வது வேறு. அன்னை கொடுப்பன பெரியவை. அவற்றை வெகு குறுகிய காலத்தில் தருகிறார். பெரியதைக் கொடுக்க முடியாது. கொடுத்தால் நாளாகும். அன்னைக்குரிய விசேஷம் பெரியதைக் குறுகிய காலத்தில் - க்ஷணத்தில் எனவும் கூறலாம் - தருகிறார்.

தம்பி - இந்தக் குழந்தைக்கு அப்படிப் பெரிய எதிர்காலத்தை க்ஷணத்தில் தருவார் என்கிறீர்களா?



அண்ணன் - அன்னை அனைவருக்கும் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார், அதை நாம் தெரிந்து பலன் பெறத் தெளிவு வேண்டும் என்கிறேன்.

தம்பி - இங்கு வேண்டிய தெளிவு 3. தானே அன்னையை Consciousness - Force ஜீவிய சக்தி என அறிதல், செயலின் சூட்சுமம், பெரிய அம்சத்துடன் (infinity) தொடர்பு கொள்ளும் திறன்.

அண்ணன் - ஆம்.

*தொடரும்.....*

☆ ☆ ☆

## அறிவிப்பு

**டிசம்பர் இதழுடன் சந்தா முடிவடையும்**
**அன்பர்கள் தாமதமின்றி உடன்**
**சந்தாவினை புதுப்பிக்க வேண்டுகிறோம்.**

# இலட்சியத் திருமணம்

இல. சுந்தரி

மாலை 5.30 மணியைத் தாண்டிவிட்டது பறவைகளும், கறவைகளும் கூடும், கொட்டிலும் திரும்பும் நேரம். காலையில் புது மலராய்க் கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும், அலுவலகங்களுக்கும் சென்றவர்கள் அலுத்துச் சலித்து வீடு தேடி வரும் நேரம். மலர்தலும், கூம்பலும் இல்லாத மலர்போல உமா வந்து கொண்டிருக்கிறாள். தெருவை அடைந்ததும், நேற்றுப் புதிதாய்த் தியான மையத்தில் அறிமுகமான பாட்டி வீட்டு வாசலில் மிகுந்த கவலையோடு இருப்பதைக் கண்டாள். உமாவைக் கண்டதும் ஏதோ ஆதரவு கிடைத்ததுபோல், உமாப்பெண்ணே! இப்போதான் ஆபீஸ் முடிஞ்சு வர்றியா? என்றாள்.

ஆமாம் பாட்டி. நீங்கள் ஏன் என்னவோபோல் இருக்கிறீர்கள்? குழந்தைகள் எங்கே? என்று உள்ளே நோக்கியவண்ணம் கேட்டாள்.

அவ்வளவுதான், அடக்கிய துக்கத்தைக் கிளறிவிட்டாற் போலாகிவிட்டது பாட்டிக்கு.

அதையேன் கேக்கற போ. தாத்தாவுக்கு இன்று போஸ்டாபீஸில் யாரையோ பார்த்துவர முக்கியம் என்று குழந்தைகளைத் தானே வரச்சொல்லிவிட்டுப் போனார். ஆனால் குழந்தைகளைக் காணோம். எனக்கோ ஊர் புதுசு. ஒன்றும் தெரியாது. தாத்தாவே அழைத்து வருவாரா? வழி தெரியாமல் குழந்தைகள் தவிக்கிறதா என்று புரியாமல் அன்னையை வேண்டிக் கொண்டேயிருக்கேன் என்றாள் கவலையாக.

சரி சரி! அன்னையிடம் சொல்லிவிட்டீர்களல்லவா? என்னை அனுப்பிவிட்டார் என்று சிரித்தவண்ணம் கூறி, கவலைப்படாதீர்கள் ஒரு நொடியில் நான் போய் பார்த்து வருகிறேன் என்று



அலுப்பில்லாமல் கூறிவிட்டு வீட்டிற்குப் போகாமல் வந்த வழியே திரும்பினாள்.

பாட்டி சற்று நிம்மதியாகி வாசலிலேயே உட்கார்ந்தாள். நேற்று தியான மையத்தில் கிடைத்த அறிமுகம், சமயத்தில் தெய்வம்போல் வந்தாள்.

உமா குழந்தைகளை அழைத்து வருமுன் நேற்றைய சம்பவங்களைக் கூறிவிடுகிறேன். அடுத்த தெருவிலுள்ள தியான மையத்திற்கு உமா வழக்கம்போல் சென்று திரும்பும்போது, இந்தப் பாட்டி 3 வயது நிரம்பிய சிறுவன், 6 வயதுச் சிறுமி ஆகிய தம் பேரக்குழந்தைகளுடன் வெளியே வந்தார். நேற்று ஆண்டுவிழாச் சிறப்புக் கூட்டமாதலால் நிரம்பக் கூட்டம். இவள் எப்போதும் சரியான நேரத்திற்கு வந்து முதல் வரிசையில் அமர்ந்து விடுவாள். தியானம் முடிந்தவுடன் அமைதியாகத் திரும்பிவிடுவாள். எல்லோருக்கும் ஒரு புன்சிரிப்புதான் இவள் பேச்சு. அதிகம் யாருடனும் பேசமாட்டாள். வீண்பேச்சு பேசும் நேரத்தில் அமைதியாய் அன்னையை நினைப்பது எவ்வளவு நல்லது என்று நினைப்பாள். சிறிது நேரம் கிடைத்தாலும் அன்னையின் அமுத மொழிகளைப் படிப்பதில் செலவழிப்பாள்.

நேற்று எல்லோரும் சென்றபின் இந்தப் பாட்டி தன் பேரக் குழந்தைகளை அழைத்துப் போவதில் சிரமப்பட்டாள். சிறுவன் எதற்கோ சிணுங்கினான். வீட்டில் கிடந்தால் வேதனையாயிருக்கிறது. அன்னையிடம் வருவோம் என்றால் ஏதாவது தொல்லை செய்கிறாயே. என்னால் உங்களுடன் போராட முடியுமா? என்று கடுமையில்லாத முறையில் லேசாகத் தன் இயலாமையை வெளியிட்டாள். சிறுவன் ஏதோ சிணுங்கினான். பின்தொடர்ந்து வந்த உமா பாட்டியின் பரிதாபத்தால் சற்று பாதிக்கப்பட்டாள்.

ஏன் பாட்டி குழந்தை அழுகிறான்? நடக்க முடியவில்லையென்றால் நான் தூக்கிக் கொள்ளட்டுமா என்று அருகில் சென்றாள். வட்டமுகமும், கரிய பெரிய விழிகளும், சுருட்டை முடியும் ரோஜாப் பூப்போலிருந்தான் சிறுவன்.

வயது நாலாகப் போகிறது. இவனைத் தூக்க முடியுமா? அதெல்லாம் ஒன்றுமில்லை - அவன் இப்படித்தான் காரணமில்லாமல் படுத்துவான் என்றாள் பாட்டி.

*தொடரும்.....*

☆ ☆ ☆

## சொஸைட்டியின் வெளியீடுகள்

கர்மயோகியின் நூல்கள்:

| | | |
|---|---|---|
| **1.** | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. **20** |
| **2.** | மனம் - ஜீவனின் முக்கிய கரணம் | ரூ. **20** |
| **3.** | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. **20** |
| **4.** | சிறியதும் பெரியதும் | ரூ. **20** |
| **5.** | கணவன் மனைவி | ரூ. **20** |
| **6.** | இரத்தினச் சுருக்கம் | ரூ. **20** |
| **7.** | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. **40** |
| **8.** | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.**100** |
| **9.** | அதிர்ஷ்டம் | ரூ.**100** |
| **10.** | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.**100** |
| **11.** | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.**100** |
| **12.** | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. **20** |
| **13.** | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. **20** |
| **14.** | யோக வாழ்க்கை விளக்கம் - I | ரூ. **80** |
| **15.** | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. **60** |
| **16.** | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.**150** |
| **17.** | வாழ்வின் அடிச்சுவடுகள் | ரூ. **60** |

**தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

## உயர்ந்த உள்ளமும் "உன்னதமான" மனநிலையும்

முதலாளி கம்பனி நஷ்டமடைவதால், மூடிவிடத் தீர்மானித்தார். முதலாளிக்குப் பல தொழில்கள். அதில் இது ஒன்று. மானேஜருக்கு உயர்ந்த உள்ளம். கம்பனியை மூடக்கூடாது எனத் தீர்மானித்து, தம்முடைய செலவில், தம்மால் முடிந்த காரியங்களைச் செய்தபொழுது எதிர்பாராத நல்ல பலன் கிடைத்தபொழுது, "இந்தக் கம்பனி மூடப்பட வேண்டியதில்லை" என முதலாளி மனம் கூறியது. மானேஜர் செய்தது முதலாளிக்குத் தெரியாது. அதனால் அவருக்கு ஏற்பட்ட செலவையும் முதலாளி அறியவில்லை.

ஒரு பெரிய (spurt) நல்ல மாறுதல் ஏற்பட்டதால் கம்பனி தொடர்ந்து நடந்தது. மானேஜர் தாம் சொந்தமாகத் தம் செலவில் செய்ததை, முதலாளி தாமே செய்யவேண்டும் என விரும்பினார். முதலாளி ஒத்துக்கொண்டார். நஷ்டமான கம்பனி, இலாபகரமாக மாறாவிட்டாலும், நஷ்டமில்லை என்ற நிலைக்கு வந்தது. முதலாளிக்குத் திருப்தி இல்லை. கம்பனியை விற்க முயன்றார். மானேஜருடைய அரைகுறை முயற்சியால் கம்பனி இலாபமும், நஷ்டமும், இரண்டும்கெட்டான் நிலையிலிருந்தது. மூடும் கம்பனியை தம் முயற்சியாலும், செலவாலும் நிமிர்த்த முன்வரும் மானேஜர் மனிதரில்லை, தெய்வம். அப்படிப்பட்டவரை நாம் நடமாடும் தெய்வம் என்கிறோம். நல்லெண்ணம் பெரியது.

சுபாவம் நல்லெண்ணத்திற்குக் கட்டுப்படாது. இவர் பொறுப்பில்லாதவர், வேலையே செய்யாத முழுச் சோம்பேறி. ஒரு மானேஜருக்கு இருக்கக்கூடாத அத்தனை குணங்களும் உள்ளவர், மானேஜர் வேலைக்குத் தகுதியில்லாதவர். இனியவர், நம்பிக்கையுடையவர், அன்பர். இவ்வளவும் நடக்கும்பொழுது இவர் துறையில் அகில இந்தியக் கழகம், இக்கம்பனியை இந்தியாவில் முதலாவதாகத் தேர்ந்தெடுத்து விருது அளிக்க முடிவு செய்தது. மனிதர் நல்லவர், ஆனால் நல்ல குணத்தைப் பூரணமாக்கும் பொறுப்பற்றவர். பொறுப்பற்றவருக்கும் அருள் அகில இந்தியப் பரிசு தருவதால், இவர் பொறுப்புள்ளவரானால் இக்கம்பனிக்கு முதலாளியாவார்.

***அன்னை கம்பனியைச் சொத்தாக அளிக்கிறார். நாம் பெறுவது விருது. விருது பெறும் சொத்து அதிர்ஷ்டமாகக் காத்திருக்கிறது.***

✯ ✯ ✯

## கம்ப்யூட்டர் - அன்னை

"நான் 8ஆம் வகுப்பில் கற்றுக்கொண்டதை என் மகன் 3ஆம் வகுப்பில் கற்றுக்கொண்டான்" என்று இன்று நாம் கூறும்படி சிறந்த பள்ளிகளில் தரம் உயருகிறது. இது என்றும் பெரிய பள்ளிகளிலிருந்தது. இன்று பரவி வருகிறது. கம்ப்யூட்டரில் CD மூலம் எல்லா வகுப்புப் பாடங்களையும் குழந்தை ஆசிரியர் உதவியில்லாமல் கற்கும்படி வந்துள்ளது. ஆசிரியர் அதுபோல் சொல்லித்தர முடியாது. அத்துடன் கம்ப்யூட்டர் குழந்தையின் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பாடத்தை அமைப்பதால், 1 வருஷத்தில் பள்ளியில் படிப்பதை குழந்தை 1 மாதத்தில் கற்கிறது. குழந்தை கம்ப்யூட்டரை விட்டு வாராது.

இந்த CDக்கள் வந்துவிட்டதால், படிக்க ஆர்வமுள்ளவர்கள், எந்த வகுப்பில் பள்ளியிலிருந்து நின்றிருந்தாலும், எந்த வகுப்புவரை படிக்க விரும்பினாலும் இனி முடியும். SSLCயுடன் நின்றவர் 38ஆம் வயதில் படிக்க முயன்றால் கம்ப்யூட்டர் 1 ஆண்டில் அவரை B.A. or M.A. ஆக்கும். கல்வித் துறையில் இது பெரிய புரட்சி. உலகம் அனைத்தும் பலன் பெறக் கூடிய புரட்சி.

Internet இதே காரியத்தை எல்லாத் துறைகளிலும் செய்கிறது. வக்கீல் சொல்ல வேண்டியது, டாக்டரிடம் கேட்க வேண்டியது, tourism information, பேராசியர்களிடம் பயிலவேண்டியது ஆகியவற்றை ஆர்வமுள்ளவர் internetஇல் இன்று பயிலலாம்.

- ***நின்றுவிட்ட படிப்புக்கு உயிர் கொடுத்தது கம்ப்யூட்டர்.***
- ***எவரும் எந்தத் துறையிலும் நிபுணராகலாம் என்பதை internet சாத்தியமாக்கியுள்ளது.***

இவை புதிய டெக்னாலஜி உலகுக்கு அளித்த நம்பமுடியாத பரிசுகள். 80 ஆண்டுகளாக அன்னை எவரும் எதையும் சாதிக்கலாம் என்று எழுதிவருவதை அறிந்தும், அதன் பலனை நாம் உணரமுடியாமலிருக்கிறோம். SSLCயுடன் நின்ற 40 வயதானவர் கம்ப்யூட்டர் மூலம் ஓராண்டில் M.A. பட்டம் எடுத்தால், அவர் முயற்சியுடையவர். அவருக்கு அந்த அனுபவம் முடிந்தபின் SSLC படிக்கும் தன் மகனுக்கு M.A. பாடம் கற்பிக்க அன்னை மீதுள்ள நம்பிக்கையைப் பயன்படுத்தினால், அன்னையின் அருள் செயல்படும் வேகமும், அம்முறையின் அற்புதமும் புரியும். அவர் ஓராண்டில் பெற்றதை அதே கம்ப்யூட்டர் மகனுக்கு ஒரு மாதத்தில் தரும்.

✯ ✯ ✯